Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAY, MAY 24, 2024

வெள்ளிக்கிழமை, மே 24, 2024 | ஒளி: 09 கதிர்: 259 | பக்கம்:09 | நகரப்பதிப்பு | FREE





பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பளம் கொடுக்காவிடின்

# குத்தகை ஒப்பந்தம் இரத்து


அமைச்சரவையில் தீர்மானம்

தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை அதிகரிப்பதாக அரசாங்கம் அண்மையில் அறிவித்திருந்த போதிலும், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தை வழங்க முடியாது என அரசாங்கத்திடம் சில தோட்டக் கம்பனிகள் முறைப்பாடுகளை முன்வைத்துள்ளதால், இது தொடர்பில் மூன்று நடவடிக்கைகளை எடுக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங் தலைமையில், புதன்கிழமை (23) கூடிய வாராந்த அமைச்சரவைக் கூட்டத்திலேயே மேற்கண்ட விவகாரம் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

தோட்டத் தொழிலாளர்களுக்கான நாள் சம்பள அதிகரிப்பை அரசு அறிவித்திருப்பினும், ஒருசில தோட்டக் கம்பனிகள் குறித்த சம்பள அதிகரிப்பை வழங்க முடியாதென அரசுக்கு முன்மொழிவுகளைச் சமர்ப்பித்துள்ளன. குறித்த நிலைமையைக் கருத்தில் கொண்டு கீழ்க் காணும் படிமுறைகளை மேற்கொள்வதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## கார் விபத்தில் சிறுமி பலி

■ தீஷான் அஹமட், எஸ்.கீதபொன்கலன்

திருகோணமலை -ஈச்சிலம்பற்று பொலிஸ் பிரிவில் உள்ள வட்டவன் பகுதியில் வியாழக்கிழமை (23) அதிகாலை இடம்பெற்ற கார் விபத்தில் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார் .

யாழ்ப்பாணம் - பருத்தித்துறையைச் சேர்ந்த கணவன், மனைவி இருவரும் இரண்டு பிள்ளைகளுடன் மட்டக்களப்பு நோக்கிப் பயணிக்கையில், குறித்த கார் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த சம்பவத்தில் நிதர்சன் ஆதித்யா என்ற 6 வயதுடைய சிறுமி உயிரிழந்துள்ளதாகவும் குறித்த சிறுமியின் சகோதரனான, 4 வயதுடைய நிதர்சன் அதிரேஸ் படுகாயமடைந்த நிலையில் மூதூர் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைகளுக்காக திருகோணமலை வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் ஈச்சிலம்பற்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## சுகாதாரம் செவ்வாயன்று முடங்கும் அபாயம்




நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் எதிர்வரும் 28ஆம் திகதி வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவதற்கு சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

உத்தியோகபூர்வ சீருடை கொடுப்பனவிற்கு இணையாக ஏனையவற்றுக்கு வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவை அதிகரிப்பது தொடர்பான சுற்றறிக்கை வெளியிடப்படவில்லை எனவும் விசேட கொடுப்பனவை அதிகரிப்பதற்கான சுற்றறிக்கையில், 15 பிரிவினரை விடுத்து வெளியிடப்பட்டுள்ளதாக சுகாதார தொழிற்சங்க கூட்டமைப்பின் இணை ஏற்பாட்டாளர் சானக்க தர்மவிக்ரம தெரிவித்தார்.

தாதியர்கள் உள்ளிட்ட சுகாதாரத் துறையின் 72 தொழிற்சங்கங்கள் கடந்த நாட்களில் மாகாண மட்டத்தில் பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுத்திருந்தன.

பொருளாதார நீதியை வழங்குவதற்கு முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு சுகாதார அமைச்சு தீர்வை வழங்குவதாகக் கூறியபோதிலும், அதனை நிறைவேற்றாமைக்கு எதிர்ப்பு தெரிவித்து சுகாதார தொழிற்துறையைச் சேர்ந்த 72 தொழிற்சங்கங்கள் இணைந்து இந்த பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுத்தன.




## சத்தமே இல்லாமல் கிழக்கு மண் பறிபோகிறது

### சுரேஸ் குற்றச்சாட்டு: நெலுகல்மலையில் விகாரை நிர்மாணத்தையும் அம்பலப்படுத்தினார்

■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பில் எல்லைக்கிராமமான கிரான் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள வடமுனை கிராம சேவகர்பிரில் உள்ள நெலுகல் மலையில் புதிய விகாரையை கட்டுவதற்கான நிர்மாணப்பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

தொடர்ச்சி P2

## செப்டெம்பர் 15 புலமைப் பரீட்சை



2024ஆம் ஆண்டுக்கான 5ஆம் தர புலமை பரிசில் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் அடுத்த வாரம் முதல் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளதாகப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. அந்த வகையில் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 27ஆம் திகதி முதல், ஜூன் மாதம் 14ஆம் திகதி வரை இணையவழி ஊடாக சமர்ப்பிக்க முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது. இதேவேளை, குறித்த பரீட்சை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் எனவும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் விண்ணப்ப திகதி முடிவடைந்ததன் பின்னர் நீடிக்கப்படாது என பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.



## நாட்களில் 36,900 மின் விநியோகத் தடைகள்

சீரற்ற வானிலை காரணமாகக் கடந்த 3 நாட்களுக்குள் 36,900 மின் விநியோகத் தடைகள் பதிவாகியுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இதனால் 3 இலட்சத்துக்கும் அதிகமான மின் பாவனையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மின் விநியோகத் தடையை வழமைக்குக் கொண்டு வருவதற்காக மேலதிக ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தனது X தளத்தில் பதிவிட்டுள்ளார்.

1987 எனும் இலங்கை மின்சார சபையின் அவசர தொலைபேசி இலக்கத்தைத் தொடர்புகொள்ள முடியாமல் போனால், 1987 என்ற இலக்கத்திற்குக் குறுஞ்செய்தி(SMS) மூலம் அல்லது http://cebcare.ceb.lk என்ற இணையத்தளத்திற்குப் பிரவேசிப்பதன் மூலம் மின் விநியோகத் தடை தொடர்பில் அறிவிக்க முடியும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.



## தட்டம்மை நோயினால் 135 மாடுகள் இறப்பு

மத்திய மாகாணத்தில் கால்நடைகளுக்குப் பரவும் நோயினால் 135 மாடுகள் உயிரிழந்துள்ளதாகக் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நோயைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர, கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்கள பணிப்பாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்கியுள்ளார் .

நுவரெலியாவில் பதிவாகியுள்ள இந்த அம்மை நோயைக் கட்டுப்படுத்துவதற்குத்

தொடர்ச்சி P2



## இருவருக்கு எமனான ஜெனரேட்டர் புகை

■ நவி

ஜெனரேட்டரை இயக்கிவிட்டு தூங்கச் சென்ற தந்தையும் மகனும் உயிரிழந்துள்ள சம்பவம் வியாழக்கிழமை (23) அதிகாலை இடம்பெற்றுள்ளதாக புபுரஸ்ஸ பொலிஸார்

தொடர்ச்சி P2

## “பொருத்தமானதாக இல்லை”

■ எஸ்.ஆர்.லெம்பேட்



காற்றாலை மின்சாரம் அமைக்கலாம்.ஆனால் அதற்கான உகந்த இடங்களை தெரிவு செய்து முன்னெடுக்க வேண்டும்.ஆனால் மன்னார் தீவு என்பது கடல் மட்டத்தில் இருந்து சற்று குறைவான இடத்தில் காணப்படுகின்றது.இத் தீவு இச்செயல் திட்டத்திற்கு பொருத்தமானதாக இல்லை என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## “குற்றச்சாட்டிய தாய்மார்கள் மன்னிப்பு கோருகின்றனர்”

### குருநாகல் மருத்துவர் ஷாபி சிகாப்தீன்




தனக்கு எதிராகக் கருத்தடை குற்றச்சாட்டுகளைச் சுமத்திய தாய்மார்கள் தற்போது தன்னிடம் மன்னிப்பு கேட்டு வருவதாக குருநாகல் வைத்தியசாலை மருத்துவர் ஷாபி சிகாப்தீன் தெரிவித்துள்ளார்.

தன்னிடம் வரும் சில தாய்மார்கள் தாங்கள் எனக்கு எதிராக முறைப்பாடு செய்தவர்கள் எனவும் தங்களை மன்னிக்குமாறு அவர்கள் கோருகின்றனர் என குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## ‘ரீமால்’ புயல் சிவப்பு எச்சரிக்கை

வங்காள விரிகுடா கடற் பிராந்தியத்தில் தாழமுக்கம் ஒன்று தற்போது உருவாகியுள்ளது. இதனை இலங்கை வளிமண்டலவியல் திணைக்களமும், இந்திய வானிலை ஆய்வு மையமும் உறுதிப்படுத்தி உள்ளன.




தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# கார் விபத்தில் சிறுமி பலி

எனினும், கணவன்-மனைவி இருவரும் காயங்களின்றி உயிர் தப்பியுள்ளதாகத் தெரியவந்துள்ளது .

உயிரிழந்த சிறுமியின் சடலம் மூதூர் தள வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஈச்சிலம்பற்று பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# தட்டம்மை நோயினால் 135 மாடுகள் இறப்பு

தேவையான தடுப்பூசிகளை வழங்குவதற்கு கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் மற்றும் தனியார் துறை இணைந்து கூட்டு பணியை நடைமுறைப்படுத்தியுள்ளதாக பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

இந்நோயைக் கட்டுப்படுத்த தற்போதுள்ள தடுப்பூசிகளின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாவிட்டால், அவசரத் தேவையின் கீழ் அவற்றை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சின் செயலாளர் ஜானக தர்மகீர்த்தி தெரிவித்துள்ளார்.

நோயினால் பாதிக்கப்பட்ட விலங்குகளின் பால் மற்றும் இறைச்சியை உட்கொள்வதால் எந்தவிதமான சுகாதார பிரச்சினைகளும் ஏற்படாது எனவும், இந்த நோய் மனிதர்களை தாக்கும் அபாயம் இல்லை எனவும் டொக்டர் ஹேமலி கொத்தலாவல தெரிவித்துள்ளார்.

# 'ரீமால்' புயல் சிவப்பு எச்சரிக்கை

தென்கிழக்கு வங்காள விரி குடா மற்றும் அதனையொட்டிய மேற்கு-மத்திய வங்காள விரி குடாக் கடற் பிராந்தியத்தில் தாழமுக்க நிலையொன்று உருவாகியுள்ளது.

இது எதிர்வரும் நாட்களில் வடகிழக்கு திசையில் நகர்ந்து, படிப்படியாக வலுவடைந்து தாழமுக்கமாக வலுவடைந்து, எதிர்வரும் 25ஆம் திகதியளவில் சூறாவளியாக உருவாகலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த சூறாவளிக்கு Oman நாட்டினால் "ரீமால்" என பெயரிடப்பட்டுள்ளது. எனும் பெயர் வழங்கப்படவுள்ளது. இது எதிர்வரும் 25ஆம் திகதியளவில் வடக்கு ஒரிசா அல்லது மேற்கு வங்கம் பகுதியினூடாக (பாலச்சூர் [illegible] கொல்கத்தா) ஊடறுத்துச் செல்லலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, இலங்கை வளிமண்டலவியல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வானிலை முன்னறிவிப்பின்படி, இலங்கையின் தென்மேற்கு கடற் பிராந்தியம் மற்றும் தென்கிழக்கு அரேபியக் கடற் பிராந்தியத்தில் காற்றானது மணித்தியாலத்துக்கு 60-70 கிலோமீற்றர் வேகத்தில் வீசுவதுடன் பலத்த மழையும் கடற் கொந்தளிப்பும் காணப்படும்.

இதன் காரணமாக மீனவர் மற்றும் கடல் சார் தொழிலாளர்கள் சிவப்பு நிறம் தீட்டப்பட்ட பிராந்தியங்களில் எவ்வித செயற்பாடுகளிலும் ஈடுபட வேண்டாம் எனவும், திணைக்களத்தினால் வெளியிடப்படும் வானிலை முன்னறிவிப்பை அவதானமாகச் செவிமடுத்துச் செயற்படுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், கற்பிட்டி முதல் கொழும்பு, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற் பிராந்தியங்களில் கடல் கொந்தளிப்பாகக் காணப்படும். இதனால் கடற்றொழிலாளர்கள் மறு அறிவித்தல் வரை குறித்த கடற்பிராந்தியங்களுக்கு செல்ல வேண்டாம் என எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, நிலவும் மழையுடனான காலநிலையை அடுத்து ஆறுகளின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி களனி கங்கை, களு கங்கை, கிங் கங்கை மற்றும் நில்வளா கங்கை ஆகியவற்றின் நீர் மட்டம் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த ஆறுகளை அண்டியுள்ள மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் சில பகுதிகளில் வெள்ளப் பெருக்கு சம்பவங்களும் பதிவாகியுள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

# குத்தகை ஒப்பந்தம் இரத்து

* நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, சமகால வாழ்க்கைச் செலவு மற்றும் அண்மையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளின் விளைவுகளைக் கருத்தில் கொண்டு தோட்டத் தொழிலாளர் ஒருவருக்குச் செலுத்த வேண்டிய குறைந்தபட்ச சம்பளத்தை மதிப்பீடு செய்தல்.

* அவ்வாறு மதிப்பீடு செய்யப்படும் சம்பளத்தைச் செலுத்துவது தொடர்பாக ஒவ்வொருதோட்டக் கம்பனிகளிடம் காணப்படுகின்ற இயலுமைகளை பரிசீலிப்பதற்குக் குழுவொன்றை நியமித்தல்

* அத்துடன், ஏதேனுமொரு தோட்டக் கம்பனி முறைகேடான முகாமைத்துவத்தால் சம்பளம் செலுத்துவதற்குத் தவறினால், அவ்வாறான தோட்டக் கம்பனிகளுடனான காணிக் குத்தகை ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதற்கு இயலுமாகும் வகையில் சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கான படிமுறைகளை மேற்கொள்ளல் ஆகிய மூன்று நடவடிக்கைகளை முன்னெடுக்கவே யோசனைகள் முன்வைக்கப்பட்டன.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் 1,700 ரூபாவாக அதிகரிப்பதை உறுதிப்படுத்தி அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் தொழில் ஆணையாளர் நாயகத்தால் மே 21ஆம் திகதியன்று வெளியிடப்பட்டுள்ளது.

அந்த வர்த்தமானியில், பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த அடிப்படை சம்பளமாக 1,350 ரூபாய் மற்றும் ஊக்குவிப்புக் கொடுப்பனவாக 350 ரூபாய் என்ற வகையில் நாளாந்தம் 1,700 ரூபாய் சம்பளத்தை அதிகரிக்கும் வகையிலான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்தது. இதேவேளை, மேலதிகமாக பறிக்கப்படும் ஒவ்வொரு கிலோகிராம் கொழுந்துக்கும் 80 ரூபாய் வழங்கவேண்டுமென்றும் அந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இருவருக்கு எமனான ஜெனரேட்டர் புகை

புபுரஸ்ஸ நெஸ்டா கொலனியை சேர்ந்த, 40 வயதுடைய சனத் ரோஹன மற்றும் 17 வயதுடைய ககன மதுசங்க ஆகிய இருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

வெசாக் தினத்தை முன்னிட்டு புபுரஸ்ஸ நகரில் வியாழக்கிழமை (23) அன்று உணவு வழங்கும் நிகழ்வு நடாத்துவதற்கு ஆயத்தமாகியிருந்தது. எனினும், அப்பகுதியில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது

இந்நிலையில் தனது அறையில் ஜெனரேட்டர் இயந்திரத்தை இயக்க வைத்துக் குறித்த தந்தையும், மகனும் உறங்கச் சென்றுவிட்டனர்.

ஜெனரேட்டரில் இருந்து வந்த கார்பன் மோனாக்சைடு வாயுவை சுவாசித்ததால் இருவரும் உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளது .

மேலும் இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை புபுரஸ்ஸ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# "பொருத்தமானதாக இல்லை"

மன்னார் பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன் ஏற்பாடு செய்த விசேட கூட்டம் வியாழக்கிழமை (23) காலை மன்னாரில் இடம் பெற்றது.

அவர் மேலும் தெரிவிக்கையில்,,

மன்னாரில் வியாழக்கிழமை(23) பொது அமைப்புக்களை ஒன்றிணைத்து விசேட சந்திப்பை மேற்கொண்டோம். மக்களின் நலன் கருதி அமைக்கப்பட்ட அமைப்புக்களை இவ்வாறு சந்தித்து மன்னார் மாவட்ட மக்களின் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடினோம்.

மன்னாரில் இரண்டு பாரிய அச்சுறுத்தல்களை மக்கள் எதிர் கொள்ளுகிறார்கள்.காற்றாலை அமைக்கப்பட்டு மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் செயல் திட்டம்.அதில் மூன்று திட்டங்கள் உள்ளதாகக் கூறப்படுகிறது.

ஒரு திட்டத்தின் அடிப்படையில் காற்றாடிகள் அமைக்கப்பட்டுள்ளன.மற்றைய இரு திட்டங்களும் உடனடியாக செயல் படுத்துவதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளதை அடிப்படையாக வைத்து காற்றாலை அமைக்கின்றதன் மூலம் இப்பிரதேசங்களில் எற்படுகின்ற பல விதமான பாதிப்புக்களை மக்கள் ஏற்கனவே நேரடியாக அனுபவிக்கின்றார்கள்.

குறிப்பாக மீன்பிடி சமூகம் இதன் விளைவாக வழமையாக அவர்கள் பிடிக்கும் மீன்களின் தொகைகளில் மாற்றம் காணப்பட்டு குறைகின்றமை மற்றும் நீரோட்டங்களின் திசைகள் வழமை போல் இல்லாது மாற்றமடைவதும் உள்ளடங்களாக பல்வேறு காரணிகளால் பிடிக்கப்படுகிற மீன்களின் தொகை பாரிய அளவில் வீழ்ச்சி அடைந்துள்ளது.

குறிப்பாக கரைவலை மீன்பிடி சம்பந்தமான முறையில் பாரிய அளவில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.இதை வைத்தும்,வேறு பல விஷயங்களை வைத்தும் காற்றாலையினை மன்னார் தீவுடன் சேர்ந்து அமைப்பது மன்னார் தீவுக்கு பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்தும் என்பது புலனாகின்றது.

காற்றாலை மின்சாரம் அமைக்கலாம். ஆனால் அதற்கான உகந்த இடங்களைத் தெரிவு செய்து முன்னெடுக்க வேண்டும். ஆனால் மன்னார் தீவு என்பது கடல் மட்டத்திலிருந்து சற்று குறைவான இடத்திலே காணப்படுகின்றது. இத் தீவு இச்செயல் திட்டத்திற்குப் பொருத்தமானதாக இல்லை என்பது இங்கு வாழும் அனைவரதும் நிலைப்பாடு.இவை சரியான முறையில் ஆராய்ந்து இச் செயல்திட்டம் முன்னெடுக்கப்படவில்லை.ஒரு திட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் இதனால் பல வித பாதிப்புக்கள் ஏற்படுகின்றன என்பது தெரிய வருகிறது.

எனவே இத்திட்டங்களை நிறுத்துவதற்கும்,ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டுள்ள திட்டத்தில் ஏற்பட்டுள்ள பின் விளைவுகள் மற்றும் பாதிப்புகளை நிவர்த்தி செய்யும் வகையில் சில மாற்று வழிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே, இவ் விடயங்களை உடனடியாக கவனத்தில் எடுப்போம்.இவ்விடயம் தொடர்பாக ஏற்கனவே சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பு ஒன்று நீதிமன்றத்தை நாடியுள்ளது.

இதனடிப்படையில் மன்னாரில் இருந்து மக்கள் சார்பாகவும் இவ்வாறான ஒரு செயல் திட்டத்தை அவர்களுடன் இணைந்து முன்னெடுப்பதற்கு நாங்கள் எதிர்வரும் வாரம் நடவடிக்கைகளை முன்னெடுக்க உள்ளோம்.

மன்னாரில் உள்ள பல ஏக்கர் தனியார் காணிகளும் அபகரிக்கப்பட்டு அதனைச் சுற்றி வேலி அடைத்துப் பல செயல் திட்டம் அமுல் படுத்தப்பட்டு வருகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

# சத்தமே இல்லாமல் கிழக்கு மண் பறிபோகிறது

"நெலுகல்மலை கிறீன் விகாரை எனும் பெயரில் புதிதாக விகாரை கட்டும் பணி திருகோணமலை சோமவதி விகாரை விகாராதிபதி தலைமையில் இடம்பெற்று வருகின்றது" என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கட்சி தேசிய அமைப்பாள் தர்மலிங்கம் சுரேஸ் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி காரியாலத்தில் புதன்கிழமை (22) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்ட விடயத்தை குறிப்பிட்டார்.

"திட்டமிட்ட அடிப்படையிலே கிழக்கு, சிங்கள தேசத்துக்குள் படிப்படியாகக் கரைந்து கொண்டிருக்கின்றது. அம்பாறை. திருகோணமலை மாவட்டங்கள் முழுவதுமாக சிங்கள தேசத்தின் திட்டமிட்ட அபகரிப்பு உட்பட்டு தமிழ் மக்கள் கையிலிருந்து விடுவிக்கப்படுகின்ற மிகப் பெரிய ஆபத்தான நிலைக்குப் போயிருக்கின்றது" என்றார். அதன் அடுத்த கட்டமாக மட்டக்களப்பு மாவட்டம் இதில் எல்லைப்புற கிராமங்கள், சிங்கள தேசத்தினாலும் பெரும்பான்மை இனத்தவர்களால் குறிவைக்கப்பட்டு எல்லைக் கிராமங்கள் அபகரிக்கும் செயற்பாடுகள் படிப்படியாக நடந்தேறிவருகின்றன.

அதனடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கிரான் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள வடமுனை கிராம சேவகர் பிரிவிலுள்ள நெலுகல் மலையில் எனப்படுகின்ற குடும்பிமலையின் பின்பகுதியான இந்த மலையில் நெலுகல்மலை கிறீன் விகாரை எனும் பெயரில் விகாரை கட்டும் பணியைத் திருகோணமலை சோமவதி விகாரை விகாராதிபதி தலைமையில் இடம்பெற்று வருகின்றது. இந்த பகுதியில் பாரிய கட்டிடம் அமைக்கப்பட்டு அதிலிருந்துகொண்டு கட்டுமானப்பணியில் இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன் நோக்கம் கிழக்கு மாகாணத்தை முற்று முழுதாக சிங்கள பௌத்த தேசத்துக்குள் கரைப்பதற்கான நடவடிக்கையாகப் பார்க்கின்றோம். வடக்கில் குருந்தூர்மலை, வெடுக்குநாறிமலை, கையகப்படுத்தப்பட்டுள்ள இந்த வேளையிலே கிழக்கு மண் சத்தம் இல்லாமல் பறிபோய் கொண்டிருக்கின்றது

மயிலத்தமடு மேய்ச்சல் தரையில் ரவுண்டப் எனும் புல்லுக்கு அடிக்கும் மருந்தையடித்து மேச்சல் புற்தரைகள் தெளிக்கப்பட்டதால் 8 ஆயிரத்துக்கு மேற்பட்ட மேய்ச்சல் தரை காணிகள் கையகப்படுத்தப்பட்டுள்ளன. அதேவேளை மகாவலி 'ஏ' வலயத்துக்குரிய வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு பெரும்பான்மை இனத்தவர்களைக் குடியேற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதேவேளை, பண்ணையாளர்களை தொடர்ந்து அச்சுறுத்தி அங்கிருந்து அவர்களை வெளியேற்றுகின்ற நடவடிக்கைகள் கட்சிதமாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. இந்த நடவடிக்கைகளுக்கு யார் காரணம் என்பதை மக்கள் மிகத் தெளிவாக விளங்கி கொள்ள வேண்டும்.

இந்த மாவட்டத்தில் இரண்டு இராஜாங்க அமைச்சர்கள் இருக்கின்றனர். சிங்கள தேசத்தினுடைய நிகழ்சி நிரலை அமுல்படுத்துவதுதான் இவர்களது இவர்களுடைய பணி. அதுவே நோக்கமாக இருக்கின்றதே தவிர மட்டக்களப்பு மாவட்டமக்களை பாதுகாக்க எந்தவொரு முன்னேற்றகரவமான செயற்பாடுகளை செய்யவில்லை.

குறிப்பாக மேய்ச்சல் தரை பகுதிக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் போக முடியாத சூழ்நிலை காணப்பட்டது. எனினும், எமது கட்சித் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. அந்த இடத்துக்குச் சென்று அந்த பகுதிக்கு பாராளுமன்ற உறுப்பினர் கூட செல்லமுடியாது என்பதை சர்வதேசத்துக்கு அம்பலப்படுத்தியிருந்தார்.

இந்நிலையில், கஜேந்திரகுமார் ஏன் இங்கு வரவேண்டும் என பிள்ளையான் கேட்டிருந்தார். நீங்கள் ஒரு காட்டிக் கொடுப்பை செய்து தமிழ் மக்களை அழிக்கின்ற செயற்பாட்டில் நின்றதனால் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகளை கூப்பிடவேண்டிய அபாய நிலைக்கு அந்த மக்களை இட்டுச் சென்றீர்கள். எனவே, அது ஒரு வெட்கக் கேடான விடயமாகும்.

தங்களது பக்கற்றுக்களை நிரப்புகின்ற விதமாக தங்களின் அமைச்சுக்கு ஊடாக கிடைக்கின்ற வீதிகளை அமைத்து அதில் 15 வீதம் தரகு பணம் பெற்றுக் கொண்டு அதற்கு வக்காளத்து வாங்குகின்ற ஒப்பந்தகாரர்களை பின்னால் வைத்துக்கொண்டு செயற்பாட்டை மிக கடசிதமாக பிள்ளையான் செய்துவருகின்றார்.

எனவே, மட்டக்களப்பு மக்கள் புத்திசாதுரியமாக சிந்திக்கவேண்டிய காலம் இது வருப்போகும் தேர்தல் மாவட்டத்தில் மேலும் ஓர் அரசியல் அடிமை நெருக்கடிக்குள் தள்ளப் போகின்றது. எனவே, வருகின்ற தேர்தலில் தமிழ் தேசியத்துடன் உள்ள தமிழ் தரப்புக்களை பலப்படுத்தவேண்டுமே தவிர மாறாக அரசுடன் நிற்கின்றவர்களுக்கு வாக்குரிமையை அளிப்பீர்களாக இருந்தால் மட்டக்களப்பில் மிஞ்சி இருக்கின்ற கொஞ்ச காணிகளும் பறிபோகி மக்களுடைய எதிர்காலம் கேள்விக்குறியாக அமைந்துவிடும் என்றார்.

# "குற்றச்சாட்டிய தாய்மார்கள் மன்னிப்பு கோருகின்றனர்"

தன்னை போதைப்பொருள் குற்றவாளி மாகந்துரே மதுசுடன் சிறையில் ஒன்றாகத் தடுத்து வைத்திருந்தனர் என வைத்தியர் ஷாபி சிகாப்தீன் தெரிவித்துள்ளார்.

நான் அவருடன் ஒன்றாக உணவைப் பகிர்ந்துகொண்டேன், அவருக்கு அருகில் உறங்கினேன் என தெரிவித்துள்ள வைத்தியர், வெள்ளை உடையணிந்த அரசியல்வாதிகளிடம் காணமுடியாத மனிதாபிமானத்தை அவரிடம் கண்டேன் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

எனது மருத்துவ தொழில்துறையைச் சார்ந்தவர்களே என்னைக் கைவிட்டனர் அரசமருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் அனுரத்த பாதெனிய அவர்களில் ஒருவர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

எந்த தொழில்துறையிலும் தங்களின் நன்மைக்காகச் செயற்படும் நபர்கள் இருப்பார்கள் நேர்மையாகப் பேசுவதென்றால் இந்த பாதெனிய என்ற நபர் அந்தநேரத்தில் இலங்கை அரசமருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவராக பணியாற்றியவர் இந்த விடயத்தில் இன்றுவரை மௌனமாக உள்ளார் எனவும் வைத்தியர் ஷாபி சிகாப்தீன் தெரிவித்துள்ளார்.

எனினும் வைத்தியர் பாதெனியவின் மனைவி இரண்டாவது தடவை கருத்தரித்த போது நானே பிரசவம் பார்த்தேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மருத்துவர்களை சாமானியர்கள் தெய்வத்திற்கு ஒப்பிடுகின்றனர் ஆனால் அதே தொழில் என்னைப் பேய்களிடம் ஒப்படைக்க பயன்படுத்தப்பட்டது எனவும் தெரிவித்துள்ள வைத்தியர் ஷாபி சிகாப்தீன் இந்த மோசமான நினைவுகள் எங்களிற்கு

தேவையில்லை நாங்கள் வளமான இலங்கையை கட்டியெழுப்புவோம் எனவும் தெரிவித்துள்ளார்.

# யாழுக்கு ஹெரோயின் கடத்திய மூவர் கைது

■ எம்.றொசாந்த்



கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட பொதி ஒன்றினுள் போதைப்பொருளை மிக சூட்சுமமாக அனுப்பி வைக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பெண்ணொருவர் உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண்ணொருவருக்கு தனியார் நிறுவனம் ஒன்றின் பொதிகள் சேவைகள் ஊடாக, சேலை உள்ளிட்ட உடுப்புகள் அடங்கிய பொதி ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த பொதியினுள் சூட்சுமமான முறையில் ஹெரோயின் போதைப்பொருளையும் மறைத்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் யாழ்ப்பாண மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் பொதியினை பெற்றுக்கொண்டவர் மற்றும் அதற்கான பணத்தினை வழங்கிய பெண் உள்ளிட்ட இருவரைக் கைது செய்தனர். அவர்களிடம் இருந்து 3 கிராம் ஹெரோயின் போதைப்பொருளையும் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், கொழும்பில் இருந்து அவர்களுக்கு பொதியினை அனுப்பி வைத்த நபரை கொழும்பில் வைத்து கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட மூவரையும் யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றில் முற்படுத்தி, பொலிஸ் தடுப்பு காவலில் வைத்து விசாரணைகளை முன்னெடுக்க அனுமதி பெற்று, பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## "கண்ணியமான மனிதனை உருவாக்குவோம்"



ஆன்மீக மற்றும் கண்ணியமான மனிதனை உருவாக்குவதே இந்த வெசாக் திருநாளின் முக்கிய நோக்கம் என்பதை நினைவில் வைத்து, அனைவருக்கும் சிறந்த வெசாக் திருநாள் வாழ்த்துகளைத் தெரிவிக்கிறேன் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தனது வெசாக் தின செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், வெசாக் தினம் என்பது கௌதம புத்தரின் பிறப்பு, ஞானம் பெறல் மற்றும் பரிநிர்வாணத்தை நினைவுகூரும் உலக பௌத்தர்களின் புனிதமான நாளாகும்.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள பௌத்தர்கள் விளக்குகளை ஒளிரவிட்டு, வழிபாடுகளுக்கு முன்னுரிமை அளித்து, மிகுந்த பக்தியுடன் இதனைக் கொண்டாடுகின்றனர்.

"சிறந்த நாளைக்காக இன்றே தியாகம் செய்வோம்" என்ற கௌதம புத்தரின் போதனையின் அடிப்படையில் ஞானம் பெறுவதற்காகப் புத்தர் கொண்டிருந்த பெரும் உறுதிப்பாட்டை, ஒரு நாடாக இந்த இக்கட்டான தருணத்தில் நாம் அனைவரும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

"சப்பத்த சம்மானசோ" அனைவரையும் சமமாக நடத்தும் பௌத்த உபதேசத்தை இன்று நாம் நினைவுகூர வேண்டும். அதேபோல் ஒரு நாடாக அதை நடைமுறையில் செயல்படுத்துவதை உறுதி செய்ய வேண்டும்.

இனம், மதம், சாதி, கட்சி வேறுபாடின்றி நாம் அனைவரும் ஒன்றிணைந்து கட்டியெழுப்பப்படும் இந்நாட்டைத் தொடர்ந்து முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டும். அதற்குப் புத்தரின் போதனைகள் வழிகாட்டும்.

விரைவான பௌதிக வளர்ச்சியை நோக்கி நகரும் உலகில் மனவளர்ச்சியுடன் கூடிய ஆன்மீக மற்றும் கண்ணியமான 'மனிதனை' உருவாக்குவதே இந்த வெசாக் திருநாளின் முக்கிய நோக்கம் என்பதை நினைவில் வைத்து, அனைவருக்கும் சிறந்த வெசாக் பண்டிகை வாழ்த்துகளைத் தெரிவிக்கிறேன் என்றார்.

## "அமைதி பெற்றிடுவோம்"



அனைத்து உயிரினங்களும் துன்பங்கள் நீங்கி, ஆரோக்கியமும், அமைதியும் பெற்றிட எனது பிரார்த்தனைகள் என பிரதமர் தினேஷ் குணவர்தன தனது வெசாக் தின வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், புத்தரின் பிறப்பு, ஞானம் பெறுதல் மற்றும் பரிநிர்வாணமடைதல் ஆகிய நிகழ்வுகளை நினைவுகூரும் வெசாக் நோன்மதி தினம் பௌத்த மக்களின் மிகவும் புனிதமான நாளாகும். பன்னெடுங்காலமாக இலங்கையர்களான நாம் அதனை மிகுந்த பக்தி சிரத்தையுடன் கொண்டாடி வருகின்றோம்.

இயற்கை அனர்த்தங்களாலும் பொருளாதார நெருக்கடிகளாலும் முடங்கியிருந்த பல வருடங்களின் பின் இலங்கையர்களான எமக்கு முழுமையான வெசாக் தினத்தை கொண்டாடும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

எல்லா காலத்திற்குமான அதன் நடுநிலை கொள்கையானது முன்னெப்போதையும் விட இன்றைய கல்விச் சமூகத்தை வழிநடத்தும். இன்றைய உலகில் பேசப்படும் பொருளாதார அபிவிருத்திக்கு நடுத்தர கொள்கையைப் பின்பற்றுவது மிகவும் அர்த்தமுள்ளதாக விளங்குகிறது. நடுநிலைமை என்பது எப்போதும் அமைதியைத் தரும் ஒரு நடைமுறையாகும்.

வெசாக் அலங்காரங்கள் வாழ்க்கையின் நிலையற்ற தன்மையை எடுத்துரைக்கும் ஒரு ஆழ்ந்த மனப் பயிற்சியாகும். வெசாக் அலங்காரமானது வாழ்க்கையின் சமநிலையற்ற தன்மையானது அழிவுக்கு வழிவகுக்கிறது என்பதை அனுபவத்தின் மூலம் பிள்ளைகளுக்குப் புரிந்துகொள்ள உதவுகிறது. அனுபவத்தின் மூலம் வாழ்க்கையைப் புரிந்து கொண்டு, வெசாக் கலையை தொடர்ந்தும் உயிர்ப்போடு பேணுவதற்கு வழிசெய்வதும், பிள்ளைகளை வெசாக் அலங்காரங்களில் ஈடுபடச் செய்வதும் பெரியோர்கள் அனைவரினதும் கடமையாகும். உன்னதமான பௌத்த தத்துவத்தின் வழியே உண்மையான மகிழ்ச்சிக்கு வழிவகுக்கும் அன்பு (மெத்தா), காருண்யம் (கருணா), மகிழ்ச்சி (முதிதா), பற்றின்மை (உபேக்ஷா) என்ற நான்கு தூண்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூகத்தில் எமது செயற்பாடுகளை அமைத்துக்கொள்வோம்.

அனைத்து உயிரினங்களும் துன்பங்கள் நீங்கி, ஆரோக்கியமும், அமைதியும் பெற்றிட எனது பிரார்த்தனைகள் என குறிப்பிட்டுள்ளார்.

## "இரத்தத்தில் ஊறிய தினம்"



முழு உலக பௌத்தர்களுக்கும் மிகவும் புனிதமான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வெசாக் பௌர்ணமி தினம், ஏறக்குறைய இரண்டாயிரத்து ஐந்நூறு வருடங்களாக எமது நாட்டு மக்களின் இரத்தத்தில் ஊறிய தினம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தனது வெசாக் தின செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும்,வெசாக் என்பது ஒவ்வொரு இலங்கையரையும் சமூக, கலாசார மற்றும் கலை மற்றும் பொழுதுபோக்கு ரீதியாகச் செல்வாக்கு செலுத்து ஒரு பொதுவான சமூக விழாவாகும்.

உலகமே மத நல்லிணக்கத்தில் கவனம் செலுத்தும் காலகட்டத்தில் நாம் இருக்கிறோம். ஒரே வயிற்றில் பிறந்த சகோதரர்களைப் போல தேசிய நல்லிணக்கமும் மத நல்லிணக்கமும் நம் வாழ்வில் பிணைந்துள்ளது.

வெசாக கொண்டாட்டம் பௌத்த சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கிறது.

புத்த பெருமான் உபதேசித்த பாதையில் நாம் சரியாக நடந்து, அந்த தர்மத்தைச் சரியாகப் பின்பற்றினால், அந்த தர்மத்தால் நெறிப்படுத்தப்பட்ட சமுதாயம் உலகில் மகத்துவம் அடைவது தவிர்க்க முடியாதது.

அந்த மகத்தான நம்பிக்கையை மனதில் கொண்டு இந்த ஆண்டு வெசாக் பண்டிகையை நம்பிக்கையுடனும் ஞானத்துடனும் கொண்டாடுவோம் என்றார்.



## உலக சாதனை படைத்த 'உய்யா'

நியூசிலாந்தில் அழிந்துபோன 'உய்யா' எனும் பெயர் கொண்ட பறவையின் இறகு சாதனை விலைக்கு விற்பனையாகியுள்ளது.

குறித்த 'உய்யா' பறவையின் இறகு சுமார் 28,400 டொலர்களுக்கு மேல் விற்பனை செய்யப்பட்டதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இது உலக சாதனை என்றும் கூறப்படுகிறது. இந்த இறகு ஏலத்தில் சுமார் 3,000 டொலர் கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

'உய்யா' என்ற பறவை நியூசிலாந்தின் பூர்வீக குடிமக்களான மவோரி மக்களின் புனித விலங்காகும்.

இந்த 'உய்யா' இறகுகள் தலைக்கவசங்களாகவும் பரிசுகளாகவும் பயன்படுத்தப்பட்டன.


அதேவேளை, 'உய்யா' பறவை கடைசியாக 1907இல் தென்பட்டதாகவும் அதன் பின்னர் அப்பறவை இனம் எங்கும் தென்பட்வில்லை எனவும் கூறப்படுகின்றது.

இப்பறவைக்கு எஞ்சியிருப்பது இந்த இறகு மட்டுமேயாகும்.

### காணாமல் போன மாணவன்

## துறவறம் பூண்டார்

■ ரஸீன் ரஸ்மின்



மதுரங்குளி பகுதியிலிருந்து கடந்த நான்கு நாட்களுக்கு முன்னர் காணாமல் போன 12 வயது மாணவன் கதிர்காமம், 20 ஏக்கர் - டோசர்வெவ கௌதம சதகம் அரன விகாரையில் தங்கியிருந்த நிலையில் புதன்கிழமை (22) கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக மதுரங்குளி பொலிஸார் தெரிவித்தனர்.

மதுரங்குளி முன்மாதிரி பாடசாலையில் தரம் 7இல் கல்வி கற்கும் நெதுசர பிரியனந்த எனும் மாணவன் கடந்த 18ஆம் திகதி முதல் காணாமல் போயிருந்தார்.

குறித்த மாணவனின் தாய், தொழில் நிமித்தம் வெளிநாட்டில் வசித்து வருவதாகவும் , மாணவன் பாட்டி வீட்டில் வசித்து வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தனது பாட்டியோடு ஏற்பட்ட முரண்பாடு காரணமாக, குறித்த மாணவன் யாருக்கும் சொல்லாமல் வீட்டிலிருந்து வெளியேறியதாக, உறவினர்கள் மதுரங்குளி பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸாருக்கு, குறித்த மாணவன் புத்தளம் - மதுரங்குளியில் இருந்து கொழும்புக்குச் சென்றுள்ளதாகவும், பின்னர் அவரின் விருப்பத்தின் படி கதிர்காமம், 20 ஏக்கர் - டோசர்வெவ கௌதம சதகம் அரன விகாரையில் ஒப்படைக்கப்பட்டதாகவும் தகவல் கிடைத்துள்ளது.

இவ்வாறு பௌத்த விகாரையில் ஒப்படைக்கப்பட்ட, குறித்த மாணவனின் விருப்பத்திற்கிணங்க திங்கட்கிழமை (20) அன்று "மதுரங்குளி சுபோதி" எனும் பெயரில் பௌத்த பிக்குவாக துறவறம் பூண்டுள்ளார் என கௌதம சதகம் அரன விகாரையின் விகாராதிபதி கலன்பிந்துனுவெவ அனுருத்த மைத்திரி தேரர் தெரிவித்துள்ளார்.

மேலும், அவரை அழைத்துவர நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளதுடன், பௌத்த துறவியாகுவதே தனது விருப்பம் எனவும், தான் விகாரையை விட்டு வேறு எங்கும் செல்லப் போவதில்லை என மதுரங்குளி சுபோதி" எனும் பெயரில் பௌத்த பிக்குமாகத் துறவறம் பூண்டுள்ள அந்த மாணவன் தெரிவித்துள்ளார் என கூறப்படுகிறது.



## வீட்டின் மீது விழுந்த மரம்

நாவலப்பிட்டி பிரதேசத்தில் வீசிய பலத்த காற்று காரணமாக நாவலப்பிட்டி-வெலிகம்பொல பிரதேசத்தில் உள்ள வீடொன்றின் மீது பலா மரமொன்று வியாழக்கிழமை (23) காலை முறிந்து வீழ்ந்துள்ளதாக நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பலா மரம் முறிந்து விழுந்ததில் வீட்டில் 3 பேர் இருந்ததாகவும், மரம் முறிந்து விழுந்ததில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

நாவலப்பிட்டி பிரதேசத்தில் நிலவும் சீரற்ற காலநிலையுடன், பல இடங்களில் மரங்கள் மற்றும் கிளைகள் உயர் அழுத்த மின் கம்பி விழுந்து கிடப்பதால் பல பகுதிகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

## மூன்றாவது தேசிய வைத்தியசாலை

கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையை தேசிய வைத்தியசாலையாக அபிவிருத்தி செய்வதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரனவினால் சமர்ப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





## உலருணவு பொருட்கள் விநியோகம்

கர்ப்பிணித் தாய்மார்களுக்கு உலருணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை வழங்கும் நிகழ்வு அலரி மாளிகையில், வியாழக்கிழமை (22) இடம்பெற்றது.

சிங்கப்பூர் ஸ்ரீலங்காராம விகாரையின் விகாராதிபதி கலாநிதி கரதெடியன குணரத்ன தேரரின் நன்கொடையால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பிரதமர் தினேஷ் குணவர்தனவின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பாராளுமன்ற உறுப்பினர்களான ஜயந்த வீரசிங்க, யதாமினி குணவர்தன, பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் பிரதீப் யசரத்ன, பிரதமரின் மேலதிக செயலாளர் ஹர்ஷ விஜேவர்தன ஆகியோர் கலந்துகொண்டனர்.

## வெசாக் பக்திப் பாடல் நிகழ்ச்சி



2024 அரச வெசாக் பண்டிகையை முன்னிட்டு, இலங்கை பொலிஸ் பௌத்த மற்றும் மத அலுவல்கள் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட வெசாக் பக்திப் பாடல் நிகழ்ச்சி கொழும்பு-தாமரைத் தடாக அரங்கில் புதன்கிழமை(22) இடம்பெற்றதுடன், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் இதனைக் கண்டுகளித்தார்.

இலங்கைப் பொலிஸ் மேற்கத்தேய வாத்தியக் குழுவின் இசையுடன் மற்றும் இலங்கைப் பொலிஸ் கலாசாரப் பிரிவின் நடனத்துடன் வண்ணமயமான இந்த பக்திப் பாடல் நிகழ்ச்சியில் பிரபல பாடகர்கள் மற்றும் கலைஞர்களும் இணைந்து கொண்டனர்.





# கால்நடைகளை காப்பாற்ற வேண்டிய கடப்பாடு உள்ளது

பால் உற்பத்தியில் நாடு தன்னிறைவு அடையுமெனக் கடந்தகாலங்களில் வாய்கிழியப் பேசப்பட்டாலும், பெருந்தொகையான டொலரை கொடுத்து வெளிநாடுகளில் இருந்து பால் மாவை இறக்குமதிச் செய்யவேண்டிய நிலைமையிலேயே நாடு உள்ளது. பாற்பண்ணை தொடர்பில் போதியளவில் கவனம் செலுத்தப்படவில்லை என்பது இதிலிருந்து புரிந்துகொள்ள முடிகின்றது.

ஒருசில மாவட்டங்களைத் தவிர்த்து ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த பெரும்பாலானவர்கள் மேலதிக வருமானத்துக்காக மாடுகளை வளர்க்கின்றனர். தனியார்த் துறையினரும் அந்தத்துறையில் கூடுதலான அக்கறையைக் காண்பிக்கின்றனர்.

எனினும், அவ்வப்போது ஏற்படுகின்ற தொற்றுநோய்கள், புண்ணாக்கு உள்ளிட்டவற்றின் விலையேற்றம், பசும்பாலுக்கு அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்படும் விலை, பாற்பண்ணையாளர்களுக்கான நிவாரணம் உள்ளிட்டவை, இந்தத் துறையில் பாரியளவில் தாக்கத்தைச் செலுத்துகின்றன.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் மயிலத்தமடு மேய்ச்சல் தரையில் புல்லுக்கு அடிக்கும் ரவுண்டப் எனும் கிருமி நாசினி, மேய்ச்சல் புற்தரைகளில் தெளிக்கப்பட்டு, 8 ஆயிரத்துக்கு மேற்பட்ட மேய்ச்சல் தரை காணிகள் கையகப்படுத்தப்பட்டுள்ளன என குற்றச்சாட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில், மத்திய மாகாணத்தில், கால்நடைகளுக்குப் பரவும் தட்டம்மை நோயினால் இதுவரையிலும் 135 மாடுகள் உயிரிழந்துள்ளன. நுவரெலியாவில் பரவியுள்ள இந்த அம்மை நோயைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான தடுப்பூசிகளை வழங்குவதற்கு ந நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது.

தடுப்பூசிகளின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாவிட்டால், அவசரத் தேவையின் கீழ் அவற்றைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கால்நடைகளுக்கு திடீரென வரும் நோய்களால், பால் உற்பத்தி பாதிக்கப்படுவது மட்டுமன்றி, இறைச்சியை உட்கொள்வதில் மக்களிடத்தில் ஒருவகையான அச்ச உணர்வு ஏற்படும். எனினும், தட்டம்மை நோயினால் பாதிக்கப்படும் பசுக்களிலிருந்து கறக்கப்படும் பாலை பருகுவதால் எவ்விதமான பாதிப்புகளும் இல்லையென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நோயினால் பாதிக்கப்பட்ட விலங்குகளின் பால் மற்றும் இறைச்சியை உட்கொள்வதால் எந்தவிதமான சுகாதார பிரச்சினைகளும் ஏற்படாது எனவும் இந்த நோய் மனிதர்களைத் தாக்கும் அபாயம் இல்லை எனவும் டொக்டர் ஹேமலி கொத்தலாவல தெரிவித்துள்ளார்.

ஏனைய மாவட்டங்களில் வாழும் கால்நடைகளுக்கு இந்த தட்டம்மை நோய் பரவாமல் இருப்பதற்கான முன்னேற்பாடுகளைச் செய்வது அவசியமாகும்.

இந்நிலையில், கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களைப் பரிசோதனைக்கு உட்படுத்தும் போது, போலியான கால்நடை வைத்தியர்களும் உள்நுழைத்து கொள்வார்கள். அவ்வாறான போலி முகங்கள் குறித்தும் அவதானமாக இருக்கவேண்டியது அவசியமாகும். ஏனெனில், நுவரெலியா மாவட்டத்தில் பெருந்தோட்ட மக்களை இலக்கு வைத்த கால்நடை போலி வைத்தியர் அண்மையில் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

எவ்வாறாயினும், கால்நடைகளை காப்பாற்றவேண்டிய கடப்பாடு அரசாங்கத்துக்கு உள்ளது. ஆகையால், காலந்தாழ்த்தாது, உரிய தரப்பினருக்கு ஆலோசனைகளை வழங்கி, மேலதிக நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென வலியுறுத்துகின்றோம்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

அழும் குழந்தையை அதட்டக் கூடாது. சுதந்திரமும் இல்லாமல், வாழ வழியும் இல்லாத மக்களிடம் வீரம் பேசக்கூடாது. வீழ்ந்தனை உடைப்பதே பழக்கமான பொழுது போலாகிவிடும்.

ஆன்மீகம் அரசியலாக்கக்கூடாது. இதனை உணர்ந்தால் முழு உலகும் அன்பின் பிடிக்குள் உல்லாசமாகிவிடும். அடக்குவதில் என்ன ஆசை, என்ன பிடிப்பு?

தன்னையே முழுமையாக வழங்குதலே தியாகம். தனக்கு மட்டும் என எண்ணுவதே துரோகம்.

வசதிக்கேற்ற பேசுவதும் உண்மை எதுவெனத் தெரிந்தும் விதண்டாவாதம் புரிவதும் நியாயங்களுக்கு முரணானது.

எவரையும் ஸ்தம்பிக்கும் நிலைக்குள் தள்ளலாகாது. பரந்த உலகில், விரிந்த வானில் எழுந்து பறந்து வாழ எவர்க்குப் பிடிக்காது?

வாழ்வதற்கான முழு உரிமைகள் தங்களுக்கும், தங்கள் சகாக்களுக்கு மட்டுமே வேண்டும் என எண்ணி அதனையே செயலாற்ற முனையும் நபர்கள் ஏராளம்.

சந்தோஷங்கள் தமக்கேயானது. பிறர் அனுபவிக்கலாகாது. என தமது செயலில் காட்டுகள் உலகம் ஏற்காது. அநியாயம் நிலைக்காது.

- பருத்தியூர் பால- வயிரவநாதன்

## கடிதங்கள்

### யானையால் அசௌகரியம்

மன்னார்-முருங்கன் பகுதியில் காட்டு யானையொன்று நடமாடுவதால் அப்பகுதி மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

குறித்த விடயம் தொடர்பாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபருடன் தொடர்பு கொண்டு தெரியப்படுத்தியதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன், தற்போது சிறுபோக செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், அதை குறித்த காட்டு யானை சேதமாக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும், அப்பகுதியிலுள்ள வீடுகள் மற்றும் தென்னை மரங்களையும் யானை சேதமாக்கும் என அஞ்சப்படுகின்றது.

மக்களின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார நிலையைக் கருத்தில் கொண்டு, காட்டு யானையை அங்கிருந்து வேறு இடத்திற்குக் கொண்டு செல்ல அதிகாரிகள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், நானாட்டான் பிரதேசச் செயலாளர் ஆகியோர் துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என அப் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

- எஸ்.ஆர்.லெம்பேட்



போரின் முடிவின் 15 ஆண்டுகளின் பின் – 1

# திரும்பிப்பார்த்தால் தெரிவது இருட்டே



தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ

மூன்று தசாப்தங்கள் நீடித்த இலங்கையின் உள்நாட்டுப்போர் முடிவுக்கு வந்து 15 ஆண்டுகள் நிறைவடைந்துவிட்டன.

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2009 மே 18ஆம் திகதி இலங்கை அரசாங்கம் போர் முடிவுக்கு வந்ததாக அறிவித்தது.

போரின் முடிவு அவலமானது. அது மூன்று இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்களை முட்கம்பி வேலிகளுக்குப் பின்னால் அகதிகளாகச் சிறை வைத்தது. ஆனால், போரின் முடிவு ஒருவித நிம்மதியை இலங்கையர்களுக்குக் கொடுத்தது. இனி குண்டு வெடிப்புகள் இல்லை, துப்பாக்கிச் சூடுகள் இல்லை, கொலைகள் இல்லை, ஆட் கடத்தல்கள் இல்லை, காணாமலாக்கப்படுதல் இல்லை, கைதுகள் இல்லை என்ற ஆறுதலில் உருவானது அது. போர் முடிந்து விட்டது, நாடு வழமைக்கும் திரும்பும் என்ற நம்பிக்கையில் தோன்றியதே அந்த நிம்மதி.

பொருளாதார ரீதியாக நாடு முன்னேறும் என்ற எதிர்பார்ப்பில் பிறந்த நிம்மதி அது. ஆனால் இன்று அந்த நிம்மதி இலங்கையர்களிடம் இல்லை. சிங்கள பௌத்த பேரினவாதம் நாட்டை நடுத்தெருவில் விட்டிருக்கிறது.

போரின் முடிவு, போர் தொடங்குவதற்கு முன்னரே நிச்சயிக்கப்பட்ட ஒன்று என்பதை உறுதிசெய்யும் வகையிலேயே அரசாங்கத்தினதும் சர்வதேச சமூகத்தினதும் ஏனையோரினதும் நடத்தைகள் இருந்ததை அவதானிக்க முடிகிறது.

2002 நோர்வேயின் வசதிப் படுத்தலுடன் தொடங்கிய பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்ட தேக்கநிலை, இது இணைத் தலைமை நாடுகளில் (அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், நோர்வே, ஜப்பான்) ஏற்படுத்திய எரிச்சலுணர்வு, இரட்டைக் கோபுரங்களின் மீதான தாக்குதலின் பின்னர் அமெரிக்கா முன்னெடுத்த பயங்கரவாதத்திற்கு எதிரான போரின் அதிர்வலைகள் ஆகிய காரணிகள் போரின் முடிவை நோக்கி உந்தித்தள்ளிய பிரதான காரணிகள்.

போரின் முடிவின் பின்னர், பிரதான அரங்காடிகளின் நடத்தை போரின் பின்னரான இலங்கையின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் முக்கிய பங்காற்றியது என்பது முக்கியமானது. அவ்வகையில், அவர்களின் நடத்தையை இப்போது சுருக்கமாகவும் பின்னர் விரிவாகவும் நோக்கலாம்.

போரின் வெற்றிக்கு முதன்மையாக உரிமை கொண்டாடிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே ஒரு முதன்மையான அரங்காடி. அவர் நினைத்திருந்தால் இலங்கையின் எதிர்காலம் வேறு மாதிரி இருந்திருக்கும்.

ஆனால், அவர் அவ்வாறு நினைக்கவில்லை. இலங்கையை ஒற்றுமைப்படுத்தி போரின் வடுக்களில் இருந்து மீட்டு நாட்டை மீளவைப்பதற்கான அரிய வாய்ப்பைக் காலம் அவருக்கு வழங்கியது. போர் முடிந்த பின்னரான ஆறு ஆண்டுகள் அவர் ஜனாதிபதியாக இருந்தார்.

பெரும்பான்மை இலங்கையர்களுக்கு அவர் ஒரு மன்னரைப் போல் காட்சியளித்தார். அவர் சொல்வதை மறுபேச்சின்றிக் கேட்பதற்கு அவர்கள் தயாராக இருந்தார்கள். துரதிர்ஷ்டவசமான அதிகாரத்தின் மீதான அவாவினாலேயே அவர் வழி நடத்தப்பட்டார். அவரைக் கொண்டாடிய மக்களாலேயே அவர் வீட்டுக்கு அனுப்பப்பட்டார்.

இரண்டாவது முக்கிய அரங்காடி, இலங்கையின் அரச கட்டமைப்பு. அது இலங்கையை ஒரு பல்லின, பல்மொழி, பல்பண்பாடு உடையதாக அங்கீகரிக்கவில்லை. போர் ஏற்படுத்திய இனப்பகை, துவேசம், சிங்கள-பௌத்த பேரினவாதத்தின் செல்வாக்கு ஆகியன இந்தக் கட்டமைப்பின் அனைத்து நிலைகளிலும் ஆழமாக வேரூன்றியிருந்தது.

அதைச் சீர்ப்படுத்துவதற்கான நடவடிக்கையை எந்தவொரு அரசாங்கமும் மேற்கொள்ளவில்லை. குறிப்பாகக் கடந்த 15 ஆண்டுகளில் சிறுபான்மையினர் எதிர்நோக்கும் பிரதான சவால்களுக்கு இதுவொரு முக்கிய காரணமாகும்.

அரசின் கட்டுமானங்களில் சிங்கள-பௌத்த பேரினவாதத்தின் கூறுகள் உட்பொதிந்துள்ளன. இதனால் சட்ட ரீதியான உறுதிப்படுத்தப்பட்ட உரிமைகளைப் பெற்றுக் கொள்வதில் கூட சிறுபான்மையினர் பாரிய பிரச்சினைகளை எதிர்கொள்கிறார்கள். இது சிங்கள-பௌத்த பேரினவாத அரசு என்ற எண்ணக்கருத்தைச் சிறுபான்மையினர் மத்தியில் ஆழமாக விதைத்துள்ளது.

மூன்றாவது முக்கிய அரங்காடி இராணுவம். போரில் இராணுவம் ஆற்றிய பணியானது மகத்துவமானதாகக் கொள்ளப்பட்டது. அது சிங்கள-பௌத்த பேரினவாதத்தால் ஒரு புனிதமாகக் கட்டமைக்கப்பட்டது.

இதனால் இலங்கையின் அதிகாரம் மிக்கதுமான ஒரு அமைப்பாக இராணுவம் வளர்ச்சியடைந்துள்ளது. இன்று இலங்கையில் மிகவும் சக்தி வாய்ந்த ஒரு அதிகாரமையமாகவும் அரச அலுவல்களையே கட்டுப்படுத்தும் சக்தியாகவும் இராணுவம் இருக்கின்றது. போருக்குப் பிந்தைய பாதுகாப்புத் துறைச் சீர்திருத்தங்கள் (security sector reforms) மேற்கொள்ளப்பட வில்லை. இதனால் இன்றும் இலங்கையின் வரவு-செலவுத் திட்டத்தில் கணிசமான தொகை பாதுகாப்புச் செலவினத்துக்காக ஒதுக்கப்படுகிறது. இவ்வாறு ஒதுக்கப்படும் தொகை கடந்து 15 ஆண்டுகளில் அதிகரித்தே வந்திருக்கிறது.

நான்காவது, சிங்கள-பௌத்த பேரினவாதம். இதனது இருப்பு பொது எதிரியைக் கட்டமைப்பதிலேயே தங்கியுள்ளது.

மூன்று தசாப்தகாலமாக தமிழ் மக்களையும் விடுதலைப் புலிகளையும் பொது எதிரியாகக் காட்டியே சிங்கள-பௌத்த பேரினவாதம் உயிர் வாழ்ந்தது. போரின் திடீர் முடிவு அவர்களுக்கு மிகப் பெரிய நெருக்கடியை உருவாக்கியது. புதிய எதிரி ஒன்றின் உருவாக்கம் அவசியமாக இருந்தது. அவ்வகையில், முஸ்லிம்கள் புதிய எதிரிகளாக உருவாக்கப்பட்டார்கள். இது இலங்கைச் சமூகத்தை இன்னும் பிரித்ததேயன்றி பயனுற எதையும் செய்யவில்லை.

ஐந்தாவதும் மிகவும் முக்கியமானதுமான அரங்காடி சர்வதேச சமூகம். போரின் முடிவில் அவற்றின் பங்கு பெரிது. ஆனால், அது குறித்துப் பேச அவர்களும் விரும்பவில்லை, அரசாங்கமும் விரும்பவில்லை.

அதேவேளை, சர்வதேச சமூகத்திடம் தீர்வை வேண்டிநிற்கும் தமிழர் தரப்புகளும் அதைப் பேச விரும்பவில்லை. கடந்த ஒன்றரை தசாப்த காலத்தில் இச்சமூகத்தின் நடத்தையானது அயலுறவு என்பது நலன் சார்ந்தது என்பதை மீண்டும் மீண்டும் பல தடவை நிறுவியுள்ளது. ஆனால், சர்வதேச சமூகத்தின் அழுத்தத்துடன் தீர்வைப் பெறுவது என்ற காலாவதியான சிந்தனையோடு சிலர் இன்னமும் கனவில் இருக்கிறார்கள்.

ஆறாவது தமிழ்த் தேசிய வாதம். விடுதலைப்புலிகளின் அழிவோடு தமிழ்த் தேசியவாதம் தன்னை சுயவிமர்சனத்திற்கு உட்படுத்திப் புடம்போட்டு புதுப் பொலிவோடு மீள்வதற்கான வாய்ப்புகள் அமைந்தன. ஆனால், அவ்வாறு நிகழவில்லை.

தமிழ்த் தேசிய வாதம் பாராளுமன்ற அரசியல் அதிகாரப் போட்டியில் பல்வேறு துண்டுகளாகப் பிரிந்து சின்னாபின்னமாகக் கிடக்கிறது. முற்போக்கான திசை வழியில் பயணித்திருக்க வேண்டிய தமிழ்த் தேசியம் சாதியத்தின் புத்துயிர்ப்பையும் பிரதேச வாதத்தையும் தனது ஆயதமாக்கி தமிழ் மக்களைப் பிரித்துச் சிதைக்கும் காரியத்தைக் கடந்த பதினைந்து ஆண்டுகளில் செய்துள்ளது. போரால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட சமூகம் புற ஒடுக்குமுறைகளிலும் மேலாக அக ஒடுக்குமுறைகளுக்கு ஆளாவது துயரமானது மட்டுமல்ல கடுமையாக எதிர்வினையாற்ற வேண்டியது. இவ்வாறு இலங்கை இன முரண்பாட்டின் முக்கிய அரங்காடிகள் ஒவ்வொருவரும் தத்தமது நலன்களை முன்னிலைப்படுத்தியதன் விளைவே இருண்ட கடந்தகாலத்தை நமக்குத் தரிசிக்க வாய்ப்பளித்தது என்பதே கசப்பான உண்மை. ஆனால், இந்த உண்மையை எந்தவொரு தரப்பும் ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை. இன்று நாடு எதிர்நோக்கியிருக்கும் பல்பரிமாண நெருக்கடியை விளங்கிக்கொள்ளப் போரின் பின்னரான வாய்ப்புக்கள் எவ்வாறு தவற விடப்பட்டன என்று பார்ப்பது முக்கியம். போரால் பாதிக்கப்பட்ட தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் அனைவரதும் இயல்பு வாழ்வை மீட்டெடுப்பதே அரசாங்கத்தின் முதன்மையாக உடனடி நடவடிக்கையாக இருந்திருக்க வேண்டும். ஆனால், அது நிகழவில்லை. இதனை அயல் நெருக்குவாரங்கள் மூலம் இயலுமாக்க முடியும் என நம்பினோர் இன்னமும் நட்டாற்றில் நிற்கிறார்கள்.

போருக்குப் பின்னர் மக்களால் இயல்பு வாழ்க்கைக்கு திரும்ப முடிந்ததா என்ற கேள்வி இன்னமும் தொக்கி நிற்கிறது. இயல்பு வாழ்க்கைக்கு மீளல் என்பது அரசாங்க ஆயுதப்படைகளதோ பிற ஆயுதக் குழுக்களதோ மிரட்டலும் ஆதிக்கமும் குறுக்கீடுமற்ற ஒரு நிலையை வேண்டிநிற்கிறது.

மக்கள் தமது சொந்தப் பிரதேசங்களில் தமக்கான வாழ்வாதாரங்களைப் பேணவும் சுதந்திரமாகவும் இராணுவ, துணைப்படைக் குறுக்கீடின்றியும் தமது தொழில்களைச் செய்யவுமான உரிமையையும் உகந்த சூழ்நிலைகளையும் வேண்டி நிற்கிறது.

இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை, பயங்கரவாதப் பிரச்சினையே இருக்கின்றது என்பதே பிரதான கதையாடலாக இருந்தது. அதன் தொடர்ச்சியாகவே பயங்கரவாதம் முற்றாக ஒழிக்கப்பட்டு விட்டது. இப்போது நாட்டிற்குத் தேவையானது அபிவிருத்தி என்ற கதையாடல் முன்னிலைப்படுத்தப்பட்டது.

இது மிகவும் கோளாறான புரிதல் என்பதை இலங்கையின் பொருளாதார நெருக்கடி மிகத் தெளிவாகக் காட்டியது. ஆனாலும், அதை உள்வாங்க அரசாங்கம் தயாராக இல்லை என்பதை பொருளாதார நெருக்கடியின் பின்னரான வரவு-செலவுத் திட்டங்கள் உணர்த்தின. இலங்கையின் பொருளாதார நெருக்கடியில் இன முரண்பாட்டிற்கும் இராணுவச் செலவீனத்துக்கும் முக்கிய பங்குண்டு. இது இன்னமும் முக்கிய பேசுபொருளில்லை.

போர் முடிந்து 15 ஆண்டுகளில் நாடு வழமைக்குத் திரும்பியதா என்ற வினா கொஞ்சம் சிக்கலானது. ஏனெனில், வழமை என்பது கால, நேர, வர்த்தமானங்களைப் பொறுத்து வேறுபடுவது. நாட்டின் தென்பகுதி மக்களின் விளக்கத்தின் அடிப்படையிலான வழமை வடக்கு மக்களுக்கு வழமைக்கு மாறானது.

வடக்கு மக்கள் கோருகின்ற வழமை, கிழக்கு மக்களின் நலன்களோடு முழுமையாக உடன்படாதது. கிழக்கு மக்களின் வழமை மேற்குக்கு புதிரானதாக இருக்கிறது. மேற்கின் வழமை மத்திய மலைநாட்டின் அடிப்படை உரிமைகளையே கேலிக்குள்ளாக்குகிறது. இதுதான் போரின் பின்னரான இலங்கையின் வழமை.



# மறக்க முடியாத மாபெரும் தலைவர்



பிரதமரான தனது அன்னை படுகொலை செய்யப்பட்ட சில மணி நேரத்துக்குள் அவர் பிரதமராகப் பொறுப்பேற்றுக் கொண்டபோது, தாயை இழந்த தனயனுக்கு எல்லாரும் ஆறுதல் கூறுகிற நிலை மாறி, தனயனே எல்லாருக்கும் ஆறுதல் கூறிய காட்சியை நாம் பார்த்தோம். தனது தாயின் ஈமச்சடங்கின்போது, அவர் நடந்துகொண்ட விதம் நாட்டு மக்களுக்கு நம்பிக்கையைத் தந்தது. பிரதமராகப் பொறுப்பேற்ற சில நாள்களிலேயே பொதுத்தேர்தலை அறிவித்து, மக்களின் பெருவாரியான வாக்குகளைப் பெற்றுத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனநாயகப் பிரதமராக உலகத்தின் முன்னே கம்பீரமாக நின்றார் ராஜிவ் காந்தி.

## விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்:

இந்த நாட்டின் வறுமையை விஞ்ஞானத்தாலும் தொழில்நுட்பத்தாலும்தான் விரட்ட முடியும் என்று ராஜீவ் நம்பினார். நாடு எதிர்நோக்கி இருந்த பல பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் திறந்த மனதுடன் பல முயற்சிகளை மேற்கொண்டார். பஞ்சாப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும், அசாம் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கவும் உடன்பாடு கண்டார். இந்த உடன்பாட்டைக் காண்பதில் கட்சி கண்ணோட்டமின்றி, நாட்டு நலனையே பெரிதாக மதித்தார். கூர்க்கா பிரச்சினையையும், மிசோ மக்கள் பிரச்சினையையும் தீர்க்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தார்.

ஜனநாயகத்தில் அதிகாரங்கள் ஓரிடத்தில் குவிந்திருப்பதைத் தடுத்து, அதைக் கீழ் மட்டத்தில் பகிர்ந்து கொடுக்க 'பஞ்சாயத்து ராஜ்', 'நகர்பாலிகா' சட்டத்தைக் கொண்டுவந்து, 'மக்களுக்கே அதிகாரம்' என்ற லட்சியத்தை அடைய முயன்றார்.

## அண்டை நாடுகளுடன் நல்லுறவு:

இலங்கைத் தமிழரின் 40 ஆண்டுகாலப் பிரச்சினையைத் தீர்க்க இலங்கை அதிபர் ஜெயவர்த்தனாவுடன் உடன்பாடு கண்டார். 'சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்' என்ற மகாகவி பாரதியின் அறைகூவலைச் செயல்படுத்த, சேது சமுத்திர திட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுத்தார். இலங்கைத் தமிழர் பிரச்சினையை அரசியல் நோக்கத்தோடு பார்க்காமல், மனிதாபிமான அடிப்படையில் அதற்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண உடன்பாட்டின் மூலம் முயற்சிகள் செய்தார்.

மாலைத்தீவில் ஆட்சியை எதிர்த்து கலகப் போர் நடந்தபோது, அந்த அரசு கேட்டுக்கொண்டதற்கிணங்க இராணுவத்தை அனுப்பி, போரை அடக்கி அந்நாட்டைக் காப்பாற்றிய பெருமை ராஜீவ் காந்திக்கு உண்டு. அந்நிய நாடுகளானாலும், அண்டை நாடுகளானாலும் சுமுகமான உறவைப் பேண 'சார்க்' என்ற அமைப்பை உருவாக்கப் பெரும் பங்காற்றினார்.

1988இல் ராஜுவின் சீன விஜயம், அந்நாட்டுடன் நமது உறவுகளைப் புதுப்பிக்கப் பெரிதும் உதவியது. நமீபியா விடுதலை பெற உலக அரங்கில் குரல் கொடுத்து, அந்த நாட்டு மக்களுக்கு விடுதலையும் பெற்றுத்தந்தார்.

சர்வதேச அரங்கில் வடக்கு தெற்கு (North - South) பிரச்சினையாக இருந்தாலும், தெற்கு - தெற்குக் கூட்டுறவாக (South - South Co-operation) இருந்தாலும், ஐ.நா. சம்பந்தப்பட்ட விவகாரமாக இருந்தாலும், அணிசேரா நாடுகளின் பிரச்சினையாக இருந்தாலும், காமன்வெல்த் விவகாரமாக இருந்தாலும் இவற்றில் ராஜீவ் காந்தியின் பங்கு வியக்கும் வகையிலிருந்தது.

ராஜீவ் தனது இளம் வயதிலேயே அணிசேரா இயக்கத்தின் தலைவராகவும், காமன்வெல்த் நாடுகளின் உந்துசக்தியாகவும் விளங்கியவர். ஐந்து கண்டங்களைச் சேர்ந்த ஆறு நாடுகளின் துணையுடன் அவர் மேற்கொண்ட ஆயுதக் குறைப்பு முயற்சி, அனைவராலும் பாராட்டப் பெற்றது.

தமிழ்நாட்டு மக்களோடு ராஜீவ் காந்தி கொண்டிருந்த நெருக்கமும் அன்பும் அளவற்றது. தமிழ் மண்ணில் கிராமம் கிராமமாகப் பலமுறை சூறாவளி சுற்றுப்பயணம் செய்து, மக்களைச் சந்தித்து அன்பைப் பொழிந்தார். மக்களின் பாச வெள்ளத்தில் திளைத்தார்.

## கோரமான படுகொலை:

உலக சமாதானத்தின் தூதுவராகவும், இந்திய ஜனநாயகத்தின் பாதுகாவலராகவும் விளங்கிய ராஜீவ் காந்தி, 1991-ல் தமிழ் மண்ணில் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்துக்கு வந்தபோது, ஸ்ரீபெரும்புதூரில் படுகொலை செய்யப்பட்ட நாள்தான் மே 21. தாமரைப் பூபோல மலர்ந்த முகத்துடன் எந்நேரமும் சிரித்தவாறு எந்தத் தமிழ் மக்களை நேசித்தாரோ அதே இனத்தைச்சேர்ந்த அந்நியர்கள் இந்தியாவின் பகைவர்கள் தமிழகத்தில் ஊடுருவி ராஜீவ்காந்தியின் இளகிய மனதைத் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்தி, ராமானுஜர் பிறந்த புனித மண்ணில் படுகொலை செய்தார்கள்.

அந்த சமயத்தில் பிரதமராகவோ, அமைச்சராகவோ இல்லாதபோதும், ராஜீவ் காந்தியின் இறுதி ஊர்வலத்தில் 63 நாடுகளைச் சேர்ந்த அதிபர்கள், மன்னர்கள், பிரதமர்கள், அரசியல் தலைவர்கள் கலந்துகொண்டது, ராஜீவ் தனக்கென உலக அரங்கில் ஏற்படுத்திச் சென்றிருந்த செல்வாக்கையும் மதிப்பையும் காட்டுவதாக இருந்தது.


இத்தகைய அரசியல் படுகொலைகளைச் செய்கிற தீவிரவாத அமைப்புகளை எதிர்த்து உலக நாடுகளெல்லாம் தொடர்ந்து குரல் கொடுத்து வருகின்றன. எந்த தீவிரவாதத்துக்கு ராஜிவ் உயிரிழந்தாரோ, அந்த தீவிரவாதத்தை முறியடிக்க ஓரணியில் திரண்டு, சூளுரை ஏற்க வேண்டிய நாளே மே 21.

நன்றி: தி இந்து
கட்டுரையாளர்:
ஆர்.கோபண்ணா,
ஆசிரியர், தேசிய முரசு



# நாம் என்ன செய்தோம்?

**இன்று புனித வெசாக் தினம்**



பெரியசாமிப்பிள்ளை
செல்வராஜ்
(முன்னாள் ராஜதந்திரி)



பௌத்த மதத்தைப் பின்பற்றும் உலக மக்கள் அனைவரும் புனித வெசாக் தினத்தை மே மாதம் இருபத்து மூன்றாம் திகதி அனுஷ்டிக்கின்றனர்.

வெசாக் பௌர்ணமி போயா தினமானது கௌதம புத்தரின் பிறப்பு, ஞானமடைதல், (பரிநிர்வாண நிலை) இறப்பு ஆகியவற்றைக் குறித்து நிற்கும் ஒரு தினமாக, கருதப்படுகின்றது.

இவ்வாறானதொரு பௌர்ணமி நாளிலேயே சித்தார்த்த கௌதமர் 'லும்பினி' (இன்றைய நேபாளம்) என்னுமிடத்தில் பிறந்ததுவும், 'புத்தகயா' எனும் இடத்தில் தவம் புரிந்து புத்த நிலை அடைந்ததுவும், இந்தியாவின் உத்தரப் பிரதேசத்தில் உள்ள 'குஷிநகர்' என்னும் இடத்தில் புத்த பெருமான் பரிநிர்வாணம் அடைந்ததுவும் இந்தப் புனித தினத்திலேயே ஆகும்.

உலகம் உன்னதமான நிலையை அடையவும், உலகில் காணப்படுகின்ற பல்வேறுபட்ட துன்பங்கள், துயரங்கள், வேதனைகள் அகல்வதற்காக, இறைவனின் அவதாரமாக பல்வேறுபட்ட மகான்களும், ஞானிகளும், ரிஷிகளும், தோன்றிய நாடு பாரதம் ஆகும்.

மனிதனுக்கு ஏற்படுகின்ற அனைத்து துன்பங்களுக்கும் காரணம் அவனது ஆசையே என்ற உண்மையை உணரச் செய்து, அவர்களின் ஆசைகளையும், பற்றுக்களையும் துறக்கச் சொல்லி நல்வழிப்படுத்திய மகானே கௌதம புத்தர் ஆவார்.

இன்று ஸ்ரீலங்கா, பூட்டான், இந்தியா, மியன்மார், கம்போடியா, சீனா, ஹொங்கொங், ஜப்பான், திபெத், லாவோஸ், சிங்கப்பூர், தாய்வான், தாய்லாந்து, வியட்நாம், தென் கொரியா, பங்களாதேஷ், மொங்கோலியா, மலேசியா இந்தோனேசியா, நேபாளம், வட கொரியா போன்ற பல நாடுகளில் வாழும் பௌத்தர்கள் இந்த தினத்தினை சமய அனுஷ்டானங்களுடன் அனுஷ்டிக்கின்றனர். மலேசியா, இந்தோனேசியா போன்ற நாடுகளில் கூட வெசாக் தினம் கொண்டாடப்படுகின்றது.

இந்தியாவில் 'புத்த பூர்ணிமா' எனப் பெயரிடப்படுகின்ற இந்த தினமானது பீகார் மாநிலத்திலுள்ள 'புத்தகயாவிலும்', உத்தரப் பிரதேச மாநிலத்திலுள்ள 'சாரநாத்திலும்' சிறப்பு வழிபாடுகளுடன் அனுஷ்டிக்கப்படுவதுடன், இந்த தினத்தில் பல நாடுகளிலுள்ள பௌத்த மக்களும் கலந்து கொள்வதுவும் இதனது சிறப்பம்சமாகும்.

இந்த தினத்தின் முக்கியத்துவமானது இது ஒரு மத அனுஷ்டானங்களுடனான நிகழ்வாக மாத்திரமல்லாது, ஒரு கலாசார அம்சமாகவும் கருதப்படுகின்றது.

பௌத்த தர்மமானது இலங்கையில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது இவ்வாறானதொரு பௌர்ணமி தினத்திலேயே ஆகும்.

பௌத்த மதம் உலகில் காணப்படுகின்ற முக்கியமான மதங்களில் ஒன்றாகும்.

பிரித்தானிய ஆட்சி காலத்தில் அன்றைய சிலோனின் ஆளுநராக இருந்த சேர் ஆர்தர் ஹமில்டன் கோர்டன் என்பவர் வெசாக் போயாவை இருபத்தேழாம் திகதி மார்ச் மாதம் 1885 பொது விடுமுறை தினமாக பிரகடனப்படுத்தினார். அவரது அறிவிப்பைத் தொடர்ந்து இருபத்தெட்டாம் திகதி ஏப்ரல் மாதம் 1885 முதலாவது முழு பூரணை வெசாக் விடுமுறை இலங்கையில் அனுஷ்டிக்கப்பட்டது.

முதலாவது வெசாக் கொடியானது இருபத்தெட்டாம் திகதி மே மாதம் 1885இல் ஏற்றி வைக்கப்பட்டது.

அத்துடன், இலங்கை அரசாங்கத்தின் உன்னதமான முயற்சியின் காரணமாக, 1999 ஐக்கிய நாடுகள் சபை, அதனது பொதுச்சபையினது 54ஆவது அமர்வில், 54/115ஆவது தீர்மானப்படி, மனிதகுலத்துக்கு கௌதம புத்தர் அவர்கள் ஆற்றிய பங்களிப்பினையும், பௌத்த மதம் உலகிற்கு ஆற்றிய பங்களிப்பினையும், மேன்மையாகக் கருதி, இத்தினத்தினை ஒரு சிறப்புத் தினமாக அறிவித்தது.

அன்றிலிருந்து ஐக்கிய நாடுகள் சபையின் தலைமை அலுவலகத்திலும், அதனது ஏனைய அலுவலகங்களிலும் ஒவ்வொரு ஆண்டும் இத்தினம் அனுஷ்டிக்கப்படுவதோடு, இந்த வருடத்துடன் ஐக்கிய நாடுகள் சபையின் இந்த தீர்மானமானது அதனது இருபத்தைந்தாவது வருடத்தினை பூர்த்தி செய்திருப்பதானது சிறப்பு மிக்க அம்சமாகும்.

"உலகளாவிய ரீதியில் பொதுமக்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங் கொடுத்துக் கொண்டிருக்கும் தற்போதைய சூழ்நிலையில் கௌதம புத்தரின் போதனைகளான சகிப்புத்தன்மை, கருணை, மனிதாபிமானம் ஆகிய பண்புகளைப் பின்பற்றி நடப்பது இன்றியமையாததாகும்" என்று ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகமான அன்ரோனியோ குட்டரஸ் அவர்கள் வெசாக் தினத்தை முன்னிட்டு 2023இல் வெளியிட்டிருந்த விசேட செய்தியில் குறிப்பிட்டிருந்தார்.

"மக்களுக்கிடையிலான புரிந்துணர்வு, நிலையான அமைதி, மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல்" போன்ற ஐக்கிய நாடுகள் சபையின் இலக்குகளுக்கும், இத்தினத்தைக் கொண்டாடுவதற்கான நோக்கத்திற்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருப்பதாக சுட்டிக் காட்டி இருந்தார்.

இந்த உலகம் யுத்தங்களுக்கும், எதிர்பாராத அச்சங்களுக்கும், முகங்கொடுத்துக் கொண்டிருக்கும் இந்த சூழ்நிலையில், புத்த பகவானது போதனைகள் இன்றைய காலகட்டத்தில் முக்கியத்துவம் மிக்கதாகக் கருதப்படுகின்றது.

இலங்கையில் அரச வெசாக் உற்சவமானது மே மாதம் 21ஆம் திகதியிலிருந்து 27ஆம் திகதி வரை ஒரு வார காலம் மாத்தளையில் நடைபெற உள்ளது.

இந்த வருடத்திற்கான வெசாக் உற்சவ கருப்பொருளாக அமைவது, "மற்றவர்கள் என்ன செய்தார்கள் என்பதை பாராமல், நாம் என்ன செய்தோம்" என்பதாக அமைகின்றது.

நாடு அரசியல், பொருளாதார ரீதியாக ஸ்திர நிலைமை அடைந்து கொண்டிருக்கும் இந்த தருணத்தில், இந்த வெசாக் தினமானது இவ்வருடம் முக்கியத்துவம் மிக்கதாகக் கருதப்படுகிறது.

கௌதம புத்தர் அருளிச் சென்ற தத்துவங்கள் எண்ணிலடங்காதவை. அவைகள் எக்காலத்திற்கும், எல்லா மக்களுக்கும் பொருந்தக் கூடிய ஒன்றாகும்.

## புத்தரின் நான்கு முக்கிய போதனைகள்:

* துன்பத்தை மக்கள் எவராலும் தடுக்க முடியாது. பிறப்பு, நோய், முதுமை, இறப்பு, ஆசை, பசி, வெகுளி, பகை, மயக்கம் அனைத்தும் துன்பத்தைத் தருபவை.
* உலகில் மக்களின் துக்கத்திற்குக் காரணம் ஆசையும் பற்றுமே ஆகும்.
* ஆசையைத் துறப்பது துன்பத்தைத் தடுக்கும்.
* நற்காட்சி, நல்லெண்ணம், நன்மொழி, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன்முயற்சி, நற்கடைபிடி, நற்தியானம் ஆகிய எட்டும் துக்கத்தைப் போக்கும் வழிமுறைகள் ஆகும் என்பதாகும்.

மனிதன் உயர்வதும், தாழ்வதும் அவனது பிறப்பால் அன்றி, அவனது செயலாலேயே என்பதே புத்த பகவான் அருளிய போதனையின் அடிநாதமாகும்.

கௌதம புத்தரின் போதனைகள் மனிதனையும், சமூகத்தினையும் நல்வழிப்படுத்தும் உன்னதமான நற்கருத்துக்களைக் கொண்டவை.

இவரது போதனைகளைச் சரியாகப் பின்பற்றி வாழுகின்ற பொழுது மக்கள் மத்தியில் மன அமைதி, சகோதரத்துவம், மனித நேயம், ஒற்றுமை, நட்புணர்வு ஆகிய பண்புகள் உயர்ந்த நிலையில் மேம்படும் எனலாம்.

இந்த புனித வெசாக் தினத்துடன், சிவனொளிபாத மலைக்கு விஜயம் செய்கின்ற யாத்திரிகர்களது யாத்திரையானது, நிறைவு பெறுவதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

" எல்லா உயிரினங்களும் பாதுகாப்பாக இருக்கட்டும்.

எல்லா மனிதர்களும் துன்பத்திலிருந்து விடுபடட்டும்.

எல்லா மனிதர்களும் நன்றாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கட்டும்".

கொமர்ஷல் வங்கி 2024ஆம் ஆண்டை

# உறுதியாக ஆரம்பித்துள்ளது





2024ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் கொமர்ஷல் வங்கியின் கடன் புத்தகப் பெறுமதி ரூ. 1.316 ட்ரில்லியன்களாகும். இலங்கை ரூபாயின் பெறுமதி பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தினாலும் அந்த காலப்பகுதியில் கடன் வழங்குவதில் கொமர்ஷல் வங்கி காட்டி வந்த தொடர் கவனம் கடன் புத்தகத்தில் இந்த நிலையை ஏற்படுத்தி ஐந்தொகையில் சுருக்க நிலையை ஏற்படுத்தி உள்ளது.

இந்தக் குழுமம் அதன் கடன் புத்தகத்தில் இவ்வாண்டின் முதல் காலாண்டில் ரூ.20 பில்லியன் அதிகரிப்பை பதிவு செய்துள்ளது. 2024 மார்ச் 31இல் முடிவடைந்த ஆண்டில் இந்த தொகை ரூ. 129 பில்லியன்களாக இருந்தது. இதன் மாதாந்த சராசரி ரூ. 10.75 பில்லியன்களாகும். மொத்தக் கடன் மற்றும் முற்பணங்களில் ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சி 10.87 வீதமாகும்.

இலங்கையின் மிகப் பெரிய தனியார் வங்கி வலையமைப்பு அதன் கிளைகள் மற்றும் இணை நிறுவனங்களை உள்ளடக்கிய கொமர்ஷல் வங்கி குழுமம் கொழும்பு பங்கு பரிவர்த்தனையில் தாக்கல் செய்துள்ள அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளது. வைப்புக்களின் பெறுமதி மிகக் குறைந்த அளவில் 0.33 வீதமாகி ரூ.2.141 ட்ரில்லியன்களாக 2024 முதல் காலாண்டில் உள்ளது. இதற்கு பிரதான காரணம் டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி நிலையாகும்.

மொத்த சொத்துக்களின் பெறுமதி 31 மார்ச் 2024இல், ரூ.2.616 ட்ரில்லியன்களாக பதிவாகியிருந்தது. இது 1.48 வீதம் குறைவடைந்துள்ளது. குறிப்பிட்ட காலப்பகுதியில் இலங்கை ரூபாயின் நிலையைக் கருத்தில் கொணடு சொத்துக்களின் பெறுமதி வெளிநாட்டு நாணயத்தில் மீள் மதிப்பீடு செய்யப்பட்டதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

குழுமம் மீளாய்வுக்கு உட்பட்ட இந்த காலாண்டில் ரூ.80.209 பில்லியன்களை மொத்த வருமானமாகப் பதிவு செய்துள்ளது. அத்தோடு, இந்த மூன்று மாத காலத்தில் தேறிய வட்டி வருமானம் 45.97 வீதத்தால் அதிகரித்து ரூ. 27.698 பில்லியன்களாக உள்ளது.

'ரூபாயின் உறுதிப்பாடு, நாட்டின் நுண் பொருளாதார இயக்கவியலின் தேவைகளால் குறைபாடுகளுக்கான ஒதுக்கீடுகள், என்பன போன்றனவே இதற்கான காரணிகள். இவை வழமையான தேவைக்கு அதிகமான விதத்தில் பிரதான குறிகாட்டிகள் மீது தொடர் தாக்குதலை செலுத்தியுள்ளன' என்று வங்கியின் தலைவர் சர்ஹான் முஹ்ஸின் கூறினார். 'எமது முதலாவது காலாண்டு புள்ளி விவரங்கள் அடையாளம் காணப்பட்ட முன்னுரிமைப் பகுதிகள் மீது, சகல பங்குதாரர்களுக்கும் பங்கு ரீதியான விளைவுகளை தோற்றுவிக்கும் வகையில் எமது கவனத்தை தொடர்ந்து வைத்திருக்கும் ஆற்றலை பறைசாற்றி நிற்கின்றது' என்று அவர் மேலும் கூறினார்.

கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சனத் மனதுங்க இது பற்றிக் குறிப்பிடுகையில், "எமது முதலாவது காலாண்டின் செயற்பாடுகள் வங்கியின் பிரிவுகளை நிதி அடிப்படையிலான செயற்பாடுகளின் பங்களிப்பை விருத்தி செய்யும் வகையில் அமுல் செய்யப்பட்ட மூலோபாயங்களின் பெறுபேறுகளை வெளிச்சம் போட்டுக் காட்டுவதாக அமைந்துள்ளது. இது எமது அடிமட்டத்தில் பெறுமதி மிக்க முன்னேற்றத்தை பதிவு செய்ய உதவியுள்ளது. இதன் விளைவாக பிரதான செயற்பாட்டு குறிகாட்டிகள் மற்றும் செயற்பாட்டு விகிதாசாரங்கள் என்பன தொடர்ந்தும் தாக்கம் மிக்கவையாக உள்ளன. இது உள்நாட்டில் முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட உள்நாட்டு வங்கி என்ற எமது பங்களிப்பை தொடர்ந்து கட்டிக்காக்கலாம் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது" என்று கூறினார்.









10 பாடசாலைகளுக்கு சியெட் இடமிருந்து

# வீதி பாதுகாப்பு உபகரணங்கள்

சியெட் களனி ஹோல்டிங்ஸ், 2024ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் மேலும் 10 பாடசாலைகளுக்கு வீதிப் பாதுகாப்பு உபரணங்களை நன்கொடையாக வழங்கியுள்ளது. அதனூடாக, பாடசாலை மாணவர்களுக்கான நிறுவனத்தின் வீதிப் பாதுகாப்புத் திட்டத்தை அதன் 15ஆவது வருடத்துக்கும் விஸ்தரித்துள்ளது.

பயன் பெறும் பாடசாலைகள் ஒவ்வொன்றுக்கும் ஏழு வீதி பாதுகாப்பு சமிக்ஞை அட்டைகள், 10 போக்குவரத்து கூம்புகள், 10 போக்குவரத்து மேலங்கிகள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான வீதிப் பாதுகாப்பு விழிப்புணர்வு குறித்த 300 கையேடுகள் என 10 பாடசாலைகளுக்கு மொத்தமாக 3,270 பாதுகாப்பு உபகரணங்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

'மக யன மக' என அழைக்கப்படும் இந்தத் திட்டம், 'சியெட் கெயார்' (CEAT Care) சமூக திட்டத்தின் கீழ் சியெட் களனி உறுதியளித்த சமூக முயற்சிகளில் ஒன்றாக அமைந்துள்ளது.

இதற்கிணங்க பிரதான வீதிகளுக்கு அருகாமையில் மற்றும் அதிக நெரிசல் பகுதிகளில் அமைந்துள்ள பாடசாலைகளுக்கு, குறிப்பாக பாடசாலை பிள்ளைகளுக்கு, பயணத்தை பாதுகாப்பானதாக்குவதற்கான நிறுவனத்தின் தொடர்ச்சியான உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாக, போக்குவரத்து பாதுகாப்பு உபகரணங்களை நன்கொடையாக வழங்குவது இத்திட்டத்தில் உள்ளடங்கியுள்ளது. இந்த முதன்மையான சமூக முயற்சியானது சியெட்டின் வீதிகளின் பாதுகாப்பில் கவனம் செலுத்துவதை பிரதிபலிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், அதன் அனைத்து தயாரிப்புகளிலும் இது ஒரு முக்கிய அங்கமாக விளங்குகிறது. மேலும், இது பாதுகாப்பை மனதில் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், இது தினமும் போக்குவரத்தை பாதுகாப்பானதாகவும் மிடுக்கானதாகவும் மாற்றும் நிறுவனத்தின் நம்பகத்தன்மையை வெளிப்படுத்துகிறது.

> பாடசாலை பிள்ளைகளுக்கு, பயணத்தை பாதுகாப்பானதாக்குவதற்கான நிறுவனத்தின் தொடர்ச்சியான உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாக, போக்குவரத்து பாதுகாப்பு உபகரணங்களை நன்கொடையாக வழங்குவது இத்திட்டத்தில் உள்ளடங்கியுள்ளது

அண்மைய நன்கொடைகளின் மூலம் பயனடைந்த 10 பாடசாலைகள் ஹேமமாலி மகளிர் கல்லூரி, கண்டி, பதுளை மத்திய மகாவித்தியாலயம், கித்தலாகம கிழக்கு கனிஷ்ட வித்தியாலயம், திஹாகொட, முந்தலம சிங்கள மகாவித்தியாலயம், புத்தளம், கிரில்லவல மத்திய கல்லூரி, சங்கிலிகநாதராவ மகாவித்தியாலயம், மதவாச்சி, மலியதேவ கல்லூரி, குருநாகல், வலஸ்முல்ல தேசிய பாடசாலை, அசோகா கல்லூரி, ஹொரணை மற்றும் ஸ்ரீ பராக்கிரம மகாவித்தியாலயம், பனாகொட ஆகியனவாகும்.

சியெட்டின் 'மக யன மக' நிகழ்ச்சித் திட்டம் 2010இல் ஆரம்பிக்கப்பட்டு இதுவரை நாடளாவிய ரீதியிலுள்ள 290 பாடசாலைகள் பயனடைந்துள்ளன. அலட்சியம் மற்றும் வீதி விதிகளை முறையாக கடைப்பிடிக்காததால் வீதி விபத்துகளால் ஏற்படும் காயங்கள் மற்றும் மரணங்கள் தொடர்பான ஆபத்தான புள்ளிவிவரங்களுக்கு பதிலளிக்கும் வகையில் இது தொடங்கப்பட்டது.

## முள்ளிவாய்க்கால் இறுதி நாட்கள்





தமிழர் மனங்கள் வெந்தநாள்
அந்தநாள்...!
சோகத்தோடு அமைதியாய்
நினைவு கூறவேண்டிய
இந்நாளை கோவில் திருவிழா
நாட்களில் தண்ணீர் பந்தலிட்டு
குளிர்பாணம் வழங்கும்
நிகழ்வுபோல் தெருவில் போவோர்
வருவோரை வழிமறித்து பச்சையரிசியில்
தேங்காய் பாலிட்டு உப்பிட்டு சுவையாய் காய்ச்சிய
கஞ்சியை கொடுத்து கொண்டாடுகிறோம்...

எப்படியான சூழலில் எந்த நிலையில்
அகப்பட்ட அரிசியில் உப்பில்லாவெறும்
சோற்றுக் கஞ்சியே அன்று கொடுக்கப்பட்டது...

இதனைக் கூட நிம்மதியாய்
நிரலில் நின்றுவாங்க முடியாபோன
உயிர்கள் எத்தனை என்பதை கூட
இப்போதைய சந்ததிக்கு நினைவுபடுத்த நாம்
நினைக்கவில்லை...

இது ஒன்றும் கேளிக்கைநாளல்ல,
இந்நாள் நாம் தோல்வியடைந்த நாள்
இந்நாள் தமிழன் தலைகுனிந்தநாள்
இந்நாள் நாமெல்லாம்
நிர்க்கதியாகியநாள்...
தமிழரெல்லாம் அடிமையாகியநாள்
இந்நாள் தமிழர் அகதிகளாகியநாள்
இந்நாள் தமிழனின் வீரம் தற்கொலை செய்தநாள்
தெருவெல்லாம் கூடிநின்றுவழிமறித்து
கஞ்சிகொடுக்கும் நாளல்ல இது வேதனையோடு
தமிழர் நினைத்திடவேண்டியநாள்...

- திருமலை ஜெயகாந்தன்-

## அகோர வெயிலுக்கு அடித்தளம் நீயே





ஓசோனினில் ஓட்டையடித்தாய் வளர்ந்த
நவீனத்தால் தேசம் முழுதுமின்று
வீசும் வெயில் கண்டு வாடி நிற்கிறது
தேற்ற வழியின்றி...

கரும் புகை கொண்டு விரும்பாதவதையும்
பசுமை கருக்கி பாழ் நிலமாக்கியும்
அரும் பாடுபடுத்தினாய் இயற்கை
வளங்களை
தெருவோர
மரங்களையும் பரந்து
படர்ந்த குளங்களின்
வனப்பையும் பச்சைக்
கம்பளத்தின் மெச்சும்
அழகையும்
அண்ணார்ந்து
பார்க்கும் கட்டிடங்கள்
விழுங்கிட
கண்ணயர முடியாத கதிர் வீச்சாய் வெப்பம்


உன்னுயிரைக் குடிக்க என்னதான் செய்வது
நவீன உலகெல்லோ?
நீரியல் வளங்கள் எல்லாம் குழாய்களுக்குள்
பணயம் வைத்தால் நில வளம் செழிப்பது
சாத்தியந் தானோ ?

நிலங் கொண்ட இரசாயனம் தடுக்கிறது
விதைகளின் வேரூன்றலை இயற்கையின்
பிடிவாதமும் பாரோர் வயிறுகளில் பாரிய
சுருக்கங்களிட கரும்புகை கக்கிச்
சுவாசப்பை கருக்கியும் கதிர் வீச்சுக்
கொண்டு கருப்பை சிதைத்தும்
மனித வளம் அழித்தும்
உணராதமானிடனே
இயற்கையைச் சற்று அணைத்து வாழடா
இன்பங்கள் காணலாம்...

இயற்கை எழிலைக் கவியெழுதி
ரசித்திடக் கவிஞனின் பேனாக்களுக்குப்
பலனில்லையின்று செயற்கைப்
புகழை செந்தமிழால்
மெருகூட்டிக் கவி புனைந்து
ரசித்திடவும் மனமியம்பவில்லை...

-குகதா-

## நினைவெல்லாம் நீயே





இந்த உலகத்தில்
உன்னைபோல் ஒருவரும் இல்லை
என்பதை விட என் உள்ளத்தில்
உன்னை தவிர வேற ஒருவரும்
இல்லை என்பதே உண்மை
நீவாழும் காலம் வரை
நான்வாழ்ந்தால் போதும்...


வருத்தங்கள் ஆயிரம் இருந்தாலும்
வேண்டுதல் யாவும் உனக்ககாக
யார் இல்லாமல் வாழ முடியாதோ
அவர்களோடு வாழ்வது தான்
மகிழ்ச்சியான வாழ்க்கை

நேற்றுவரை எதையோ தேடினேன்
இன்று என்னையே தேடுகிறேன் உனக்காக
தித்திக்கும் உன் நினைவுகள்
சந்திக்கும் போதுதான்
காத்திருக்கும் வலிகள் கூட
காணாமல் போய் விடுகின்றது...

என் கனவுகள் நீயாக இருக்கும் வரை
என் கவிதைகள் உன் பெயர் சொல்லும்
வரிகளில் இல்லாத ரசனை
உன்னிருவிழிகளில் உணர்ந்தேன்...

- றொசில்டா அன்டன்-

## வெள்ளை நரிகளும் தந்திரப் பேச்சுக்களும்





மேடையில் முழங்கும் தேர்தல் நாதம்
மெதுவாய் வேடம் பேச்சில் புனையும்
பொய்களின் அழகு எத்தனை வடிவில்
பொங்கும் உணர்வுகள் போதை
வார்த்தையில்

நடந்ததைச் சொல்லி
நாடகம் நடித்து
நயமாய் வேண்டும்
வாக்குப் பிச்சைகள்
அடிப்படை
வாதமும் அநியாய
மோதலும்
அரங்கில் நடக்கும்
போலி கூத்துகள்

நாவில் விடத்தை நல்லதாய்
தடவி நவிலும் மொழிகள்
நம்பிக்கை தருமே
ஏமாற்றும் காலமும் ஏழையின்
கோலமும்
ஏங்கிதவிக்கும் உண்மையின்
வரவுகள்

தந்திரப் பேச்சுக்கள் மந்திர வலையாய்
தகுதியை இழந்தவன் மக்களில்
வீசுவான்
இவர்களை நம்பி இழிவாய்
வாழ்ந்து

இதுவரை இழந்தோம் அரசியல்
உரிமையை
வெள்ளை ஆடையில்
கொள்ளைநரிகளாய்
வேதனைகொடுக்கும்
தேர்தல் முதலைகள்...

- சம்பூர் சமரன்-



# பயணிகளுக்காக பயணம்

எம்.கோசலா,
ஊடக கற்கை,
யாழ். பல்கலைக்கழகம்.

> **பயணத்தை ரசித்துக் கொண்டு சுற்றுலா செல்லும் எங்களால் வாகனங்களில் சொகுசாக இருந்து கூட பல கிலோ மீட்டர் வரை பல மணிநேரம் பயணம் செய்ய முடிவதில்லை. ஆனால், அவர்களோ காலை, மாலை இரவு என எதுவும் பாராமல் இருபத்து நான்கு மணி நேரமும் வாகனத்தின் உள்ளே அமர்ந்து அந்த வாகனத்தில் இருந்து வருகின்ற வெப்பத்தினை வெளியில் வாய் திறந்து கூடச் சொல்ல முடியாமல் அதனைத் தாங்கிக் கொண்டு வாகனத்தைச் செலுத்துகிறார்கள்**

வானில் பறந்து செல்லும் பறவையின் நிழல் தண்ணீரில் பட்டுச் செல்வதைப் போல தன்னிருப்பை உலகின் மீது படிய விட்டுச் செல்பவனே சிறந்த பயணி ஆவான். இந்தப் பூவுலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் ஏதோ ஒரு விடயத்தை நோக்கித் தான் பயணம் செய்கிறான். அதுபோல, தான் இன்றைய காலகட்டத்தில் பயணங்கள் இன்றியமையாத ஓர் அம்சமாக மாறிவிட்டது. அது தொழில், கல்வி, சுற்றுலா, பொழுதுபோக்கு என நமது வாழ்வில் பல காரணங்களுக்காக பல்வேறு சந்தர்ப்பங்களிலும் பயணங்களை மேற்கொள்கின்றோம். இவ்வாறு பயணங்களை மேற்கொள்ளும் போது அந்த பயணங்களை மேற்கொள்வதற்குக் காரணமாக உள்ள சாரதிகளைப் பற்றி நாங்கள் சிந்தித்துப் பார்த்ததுண்டா?

உலக மக்களின் நடமாட்டத்திற்கும் சமூக இணைப்பிற்கும் உலகின் ஒட்டுமொத்த செயல்பாட்டிற்கும் முதுகெலும்பாகவும் அடித்தளமாகவும் இருப்பது சாரதிகளே ஆகும் உலக இருப்பிற்காக உணவினை உற்பத்தி செய்யும் விவசாயிகளின் பங்கு எத்தகையதோ அது போல அந்த உற்பத்தி பொருட்களினை ஒவ்வோர் இடமும் கொண்டு சென்று சேர்ப்பதில் சாரதியானவன் முக்கிய பங்கு வகிக்கிறான்.

நாங்கள் எமது மகிழ்ச்சிக்காகவும் உலகைச் சுற்றிப் பார்ப்பதற்காகவும் பயணங்களை மேற்கொள்கின்றோம். ஆனால், சாரதிகளோ மக்களுக்குச் சேவை செய்வதற்காகவும் ஒருநாள் கூலிக்காகவும், ஏனையவர்களை மகிழ்ச்சிப்படுத்துவதற்காகவும் அவர்களது வாழ்வைத் தியாகம் செய்து பயணங்களை மேற்கொள்கிறார்கள். அடுத்த நிமிடம் என்ன நடக்குமோ என தெரியாமல் வாகனங்களைச் செலுத்திக் கொண்டு தன்னை நம்பி பயணம் செய்யும் பயணிகளைக் கவனமாகக் கொண்டு செல்ல வேண்டும் என்பதை மனதில் வைத்து சுயநலமற்றவாறு செயல்படும் உயர்ந்த மனிதர்கள் என்றால் அது சாரதிகள் மட்டும் தான்.

நமது வாழ்வில் அன்றாட தேவைகளான பொருட்கள் சேவைகளைப் பெற்றுக்கொள்வது தொடக்கம் அபாய கால தேவைகளான விபத்துக்கள், தீ பரவல்கள், போர்கள், தொற்று நோய்கள் என அனைத்து விடயங்களிலும் நமது வாழ்வில் சாரதிகள் இன்றளவும் முக்கிய பங்கு வகித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். எனினும், இதனை அறியாத சமூகமானது சாரதி தொழிலை ஓர் அடிமட்ட தொழிலாகக் கருதுவது மட்டுமல்லாமல் அவர்களுக்குரிய தகுந்த மரியாதையையும் வழங்குவதில்லை.

தனது உயிரைக் கூட பொருட்படுத்தாமல் தன்னை நம்பி வந்த பயணிகளைக் காப்பாற்ற உயிர்த் தியாகம் செய்த சாரதிகள் இவ்வுலகில் அதிகம் உண்டு. அதுமட்டுமல்லாமல் விபத்தில் சிக்கி உடல் உறுப்புகளை இழந்த சாரதிகளும் உண்டு. அத்தகைய சாரதிகளினுடைய குடும்பமானது இன்றளவும் எவ்வளவு கஷ்டத்தில் வாழ்கிறது என்று கூட நமக்குத் தெரியாது அது பற்றியும் நாங்கள் சிந்திப்பதில்லை.

சாரதி எனும் பயணத்தை அவன் தொடங்கும் போது தனது மனைவி, பிள்ளைகள் என அனைவரையும் தனது மனதில் ஒடுக்கி வைத்து விட்டே தனது பயணத்தை ஆரம்பிக்கிறான், நாங்கள் மனைவி, பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்களோடு மகிழ்ச்சியை அனுபவிக்கும் போது, அவனது மனதினிலே ஓடிக்கொண்டிருக்கும் குடும்பத்தைப் பற்றிய மனவேதனையை நாங்கள் எப்போதும் நினைத்துப் பார்ப்பதில்லை.

அதுமட்டுமல்லாமல், சாரதி வேலைக்குச் செல்லும் சாரதி பாதுகாப்பாக வீட்டுக்கு வரும் வரை அவர்களது குடும்பத்தில் உள்ளவர்களது உள்ளக் குமுறல்கள் கூட எமக்குக் கேட்பதில்லை. இவற்றை எல்லாம் தாண்டித் தான் அவன் வாகனத்தைச் செலுத்துகிறான்.

பயணத்தை ரசித்துக் கொண்டு சுற்றுலா செல்லும் எங்களால் வாகனங்களில் சொகுசாக இருந்து கூட பல கிலோ மீட்டர் வரை பல மணிநேரம் பயணம் செய்ய முடிவதில்லை. ஆனால் அவர்களோ காலை, மாலை இரவு என எதுவும் பாராமல் இருபத்து நான்கு மணி நேரமும் வாகனத்தின் உள்ளே அமர்ந்து அந்த வாகனத்தில் இருந்து வருகின்ற வெப்பத்தினை வெளியில் வாய் திறந்து கூடச் சொல்ல முடியாமல் அதனைத் தாங்கிக் கொண்டு வாகனத்தைச் செலுத்துகிறார்கள்.

எங்களால் ஒருநாள் கூட உறக்கமின்றி, ஓய்வு இன்றி, உணவு இன்றி இருக்க முடியாது ஆனால் அவர்களோ ஒவ்வொரு நாளும் ஒழுங்கான தூக்கம் இன்றி ஒதுங்கி நின்று தூங்க வழியும் இன்றி மனதில் நிம்மதி இன்றி தமது பற்களைக் கடித்துக்கொண்டும் பாடல்களைக் கேட்டுக் கொண்டும் வாகனத்தைச் செலுத்துகிறார்கள். உற்றார் உறவினர் என அனைவரும் இருந்தும் அவர்களோடு கூடியிருந்து மகிழ்ச்சியாய் உணவு உண்ண வழியின்றி அநாதைகள் போல வெவ்வேறு ஊர்களில் கிடப்பதை உண்டு அவர்களது அனைத்து சந்தோசத்தையும் தொலைத்து பயணிகளுக்காக தமது நேரத்தை மாற்றி அமைத்துக் கொள்ளும் உத்தமர்கள் தான் இவர்கள். அவர்களது வீட்டில் நடைபெறும் சந்தோசமான மற்றும் துக்கமான நிகழ்வுகளிற்குக் கூட நேரம் ஒதுக்கி நிற்க முடியாமல் அவற்றையெல்லாம் தியாகம் செய்து பயணிகளுக்காகப் பயணித்துக் கொண்டிருக்கிறான்.

மழை, வெயில் எனும் பாதக சூழ்நிலை, நிதிச்சுமை, போக்குவரத்து நெருக்கடி, குடும்பப் பிரச்சினை, வாகன பழுதுகள், உடல்நலக்குறைவு, மன உளைச்சல் போன்ற பல்வேறு வகையான சவால்களை எதிர்கொண்டே பணிபுரிகிறார்கள். இத்தகைய சாரதிகளுக்கு நாம் பாராட்டு விழாவோ சான்றிதழ்களோ சன்மானமோ வழங்க வேண்டியதில்லை.

அதற்குப் பதிலாக அவர்களை அங்கீகரித்து அவர்களுக்கு ஆதரவளிப்பது மட்டுமில்லாமல் அவர்களை மரியாதையாக நடாத்துவதுடன் நம்முடைய பயண முடிவில் பாதுகாப்பான பயணத்தை வழங்கிய சாரதிக்கு நன்றி கூறினாலே அவர்களது மனம் மகிழ்வடைந்துவிடும் மரணத்தை நினைத்தாலே பயந்து சாகும் எம்மவர்களுக்குத் தெரியாது ஒவ்வொரு நொடியும் அவர்கள் மரணத்தை எதிர் நோக்கிய பயணம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று.

இதற்கெல்லாம் காரணம் அவர்களது ஒருநாள் சம்பளத்தில் தான் அவர்களது முழுக் குடும்பமும் வாழ்கிறது. அத்துடன் தன்னை நம்பி வந்த பயணிகளின் மகிழ்ச்சியில் தான் அவர்களது மனநிறைவே உள்ளது.

அவர்களது உயிர் பிரியும் கடைசி நொடி வரை வாகனத்தைச் செலுத்திக் கொண்டு தான் இருக்கிறார்கள். அத்துடன் இன்று வரை அவர்களது வாழ்க்கைப் பாதையில் மலராத மகிழ்ச்சியும், தொலையாத சோகமும், நடக்காத முன்னேற்றமும் என முடிவில்லாமல் தான் பயணித்துக் கொண்டிருக்கிறார்கள். இத்தகைய சாரதிகளின் சேவையினை சமூக சேவையாகக் கருதி அவர்களைப் போற்றுவோம்.



**இலங்கையில் பல மதத் தலங்களின் வரலாறு**

# எப்படி அழிக்கப்படுகிறது?

ஜே.ஏ.ஜோர்ஜ்

**(நேற்றைய தொடர்ச்சி...)**

இதுதான் மக்களின் கேள்வி. இந்நிலையில் தமிழர்களின் பூர்வீக நிலங்களை தொல்லியல் இடங்களாக அறிவித்துக் கையகப்படுத்துவதை அரசு உடனடியாக நிறுத்த வேண்டும். அவர்களின் உரிமைகள் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்” என்கிறார் வடக்கு, கிழக்கில் முன்னெடுக்கப்படும் பௌத்த மயமாக்கல் தொடர்பில் தொடர்ந்து குரல் கொடுத்து வரும் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன்.

இவ்வாறு, தமிழர் பகுதிகளில் பௌத்த மயமாக்கல் நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தமிழர் தரப்பால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை அரசாங்கம் மறுத்துள்ளதுடன், அரசாங்கம் மதம் மற்றும் மொழி அடிப்படையில் பாரபட்சம் காட்டவில்லை என்றே கூறுகின்றது.

“பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்று அரசியலமைப்பின் 9ஆவது உறுப்புரிமையில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், ஏனைய மதங்களை இரண்டாம் பட்சமாக்க வேண்டும் என்று எவ்விடத்திலும் குறிப்பிடப்படவில்லை. அத்துடன், அரசாங்கம் மற்றும் அமைச்சு, மதம் மற்றும் மொழி அடிப்படையில் எவரையும் மலினப்படுத்தவில்லை. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள தொன்மை வாய்ந்த இந்து கோயில்களைப் புனரமைக்க உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு இந்து மத விவகாரங்கள் திணைக்களத்துக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இந்து மத கலாசாரத்தையும், மத சின்னங்களையும் பாதுகாக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.” என புத்தசாசன,சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவிக்கின்றார்.

இதேவேளை, தொல்பொருள் திணைக்களத்தின் மீதான இந்தக் குற்றச்சாட்டுகள் குறித்து சிரேஷ்ட பேராசிரியர் அனுர மனதுங்க, தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாகக் கடமையாற்றிய காலத்தில் (2023 மே 28ஆம்திகதி) திவயின பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியில் வெளியிட்ட கருத்தினை இந்த இடத்தில் சுட்டிக்காட்ட முடியும்.

“இலங்கையில் பல இனங்கள் உள்ளன என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய உண்மை. மேலும், பெரும்பான்மையானவர்கள் சிங்கள-பௌத்தர்கள் என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய உண்மையாகும். ஸ்ரீபாத, கதிர்காமம் என அனைவரும் வழிபடும் சில தலங்கள் உள்ளன. அத்துடன், சிங்கள பௌத்தர்களிடம் ஏராளமான தொல்லியல் சான்றுகளும் உள்ளன. வடக்கு, கிழக்கு மட்டுமன்றி, தமிழ்நாட்டிலும் பௌத்த சிதைவுகள் அதிகம். ஏனெனில், அந்தக் காலத்தில் பௌத்தம் ஏறக்குறைய எல்லா இடங்களிலும் பரவியிருந்தது. அரிதான சந்தர்ப்பங்களில், இந்துக்களும் பௌத்த இடிபாடுகளில் வழிபடுகின்றனர். அந்த மக்கள் அதனை தமது உரிமைகள் என்று அழைக்கிறார்கள். ஏனென்றால், எவ்வளவு காலத்திற்கு முன்பு அந்த நடவடிக்கைகளுக்குச் சென்றார்கள் என்பது இப்போது மக்களுக்குத் தெரியாது. பிரச்சினைக்கு இதுவும் காரணம்” என பேராசிரியர் அனுர மனதுங்க குறிப்பிடுகின்றார்.

சிவனொளிபாதமலை மற்றும் கதிர்காமம் போன்றே தமிழ்-சிங்கள மக்கள் ஒற்றுமையுடன் வழிபடும் தலமாக நைனாதீவு உள்ளது. சப்த தீவுகளிலும் தனிப்பெரும் சரித்திரப் புகழ் பெற்ற நயினாதீவு யாழ்ப்பாண நகரத்தில் இருந்து தென்மேற்கே ஏறக்குறைய 37.3 கிலோமீற்றர் தொலைவில் அமைந்திருக்கின்றது. சிங்கள மக்கள் இதனை நாகதீப என அழைத்து வருகின்றனர். நயினா தீவுக்குத் தரை வழிப் பாதை இல்லை. யாழ்ப்பாணத்திலிருந்து குறிகாட்டுவான் வரை வாகனத்தில் சென்று, குறிகாட்டுவானில் இருந்து படகு ஊடாக நயினாதீவு தீவிற்குச் செல்ல முடியும். இந்த தீவில் உள்ள நாகபூசணி அம்மன் கோயில் வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகும். இந்த கோயில் “நயினாதீவு நாகபூசணி அம்மன் கோயில்” என்று அழைக்கப்படுகின்றது. இந்த கோயிலின் அண்மையில் ஒரு பௌத்த விகாரை அமைக்கப்பட்டுள்ளதுடன், இதனை நாகவிகாரை என்று அழைக்கின்றனர். பௌத்த சமயத்தவர் கௌதம புத்தர் இந்தத் தீவுக்கு வருகை தந்ததாக நம்புகின்றனர். அத்துடன், இந்த விகாரையில் உள்ள சில பௌத்த பிக்குகளைத் தவிர இந்த தீவில் வரலாற்று ரீதியாகத் தமிழர்களே வசித்து வருகின்றனர்.

நாகத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாகியுள்ள இந்த தீவில் உள்ள வணக்கஸ்தலங்களில் தமிழ் - சிங்கள மொழி பேசும் அனைத்து இன மக்களுக்கு இடையிலான உறவை வலுப்படுத்துவதாக அங்குள்ள நாக விகாரையின் கலல்லேகம தம்மதிலக தேரர் தெரிவிக்கின்றார்.

இனம், மதம், மொழி பாராமல் இங்கு பக்தர்கள் வந்து செல்லுகின்றனர். இந்த தீவில் உள்ள தமிழ் மக்கள் எம்மீது அன்புடன் உள்ளனர். இங்கு எந்த பேதங்களும், வேறுபாடுகளும் இல்லை. அண்மையில் நடைபெற்ற நாகபூசணி அம்மன் கோயில் திருவிழா ஊர்வலத்தில் பங்கேற்பதற்கான ஆண் யானையை அழைத்துவர எமது விகாரையின் நாயக்க தேரர் ஏற்பாடுகளைச் செய்திருந்தார். இங்கு வருவோர் கோயிலுக்கும் செல்கின்றனர். தமிழ் பக்தர்கள் விகாரைக்கும் வருகின்றனர்” என்று அனைவருக்கும் பொதுவான வணக்கஸ்தலமாக நைநாதீவு இருப்பதைச் சுட்டிக்காட்டினார்.


இதேவேளை, நாகவிகாரையின் ஒரு பகுதிகளில் தமிழ் கடவுகளின் உருவச் சிலைகள் வைக்கப்பட்டுள்ளதை அங்கு செல்பவர்களால் அவதானிக்க முடியும்.

மத ஒற்றுமையின் புன்னிய பூமியாகக் காணப்படும் நைனாதீவில் நடத்தப்படும் அமுதசுரபி அன்னதான மண்டபத்துக்குத் தமிழர்கள் மட்டுமன்றி பௌத்தர்கள் உள்ளிட்ட அனைத்து மதத்தவர்களும் வந்து தங்கி இளைப்பாறிச் செல்வதாக அன்னதான சபையின் உறுப்பினர் மதியாபரணன் அம்பிகைபாகன் தெரிவிக்கின்றார்.

“இது சிறிய தீவாக இருந்தாலும் தமிழ், சிங்கள, முஸ்லிம், கிறிஸ்தவ மக்கள் இதனைச் சுற்றுலாத் தலமாக அல்லாமல், தங்களுடைய ஆன்மீக வழிபாட்டுத் தலமாக நினைத்து இங்கே வந்து செல்கின்றனர். அவர்களுக்கு நாங்கள் எந்தவொரு பாகுபாடும் காட்டுவதில்லை. இந்த அமுதசுரபி மண்டபத்தில் நூற்றுக்கணக்கான பௌத்த யாத்திரிகர்கள் வந்து தங்கிச் சமைத்து விகாரைக்குரிய தானத்தைக் கொடுக்கின்றனர். ஹம்பாந்தோட்டை முதல் அநுராதபுரம், கண்டி, கம்பஹா என பல பகுதிகளைச் சேர்ந்தவர்கள் இங்கு வருகின்றார்கள். வார இறுதியில் இங்கு அதிக கூட்ட நெரிசலாகக் காணப்படுவதுடன், இங்கு இன, மத, குல, சாதி என எந்த பேதமும் இல்லை” என்றார் மதியாபரணன் அம்பிகைபாகன்.

வடக்கு, கிழக்கில் தமிழ் பகுதிகளில் பௌத்த விகாரைகள் உருவாக்கப்பட்டு, சிங்கள குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டு, தமிழர்களின் இருப்பு கேள்விக்கு உள்ளாக்கப்படும் நிலையில், இந்து ஆலயங்களில் தமிழர்களின் வழிபாட்டு முறைகள் காலப்போக்கில் அழிக்கப்பட்டு, அதுவும் பௌத்த மயமாக்கப்பட்டு விடுமோ என்ற அச்சம் தமிழ் மக்களின் மனத்தில் இழையோடிக் கொண்டுள்ளது. இந்த நிலையை நீக்கி அனைத்து இன மக்களும் தமது வழிபாடுகளை அச்சமின்றி மாற்றமின்றி முன்னெடுத்துச் செல்வதை உறுதிப்படுத்த வேண்டும் என்பதே இன்றைய காலத்தின் தேவையாகும். அத்துடன், இந்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்துவதும் முக்கியமானதாகும்.

(முற்றும்)



# பலிக்குப் பலி



இரா.சிவலிங்கம்
கொட்டகலை

**(நேற்றைய தொடர்ச்சி...)**

அபே பௌலே ஓயாவகே மே கெத வெடக் கொரளா நே. என கோபமாக ஏசிவிட்டு கண்ணத்தில் அறைகின்றார்.

தாய்க்கு சுகயீனம் படுத்தப் படுக்கையாக உள்ளார். அவர்கள் பேசுவது ஒன்றும் அவர் காதில் விழவில்லை. தந்தைக்கு கோபம் இன்னும் அடங்க வில்லை. சதீஸ் வேலைக்காரன், தோட்டத்தில் உள்ளவன், எந்தசாதிக்காரனோ தெரிய வில்லை. என ஏசியது சுவாதிக்கு சற்றும் பிடிக்கவில்லை. நா கலியாணம் கட்டினால் அவனைத்தான் கட்டுவேன் என ஒற்றைக் காலில் நிற்கின்றாள். இதனைக் கேட்ட தகப்பன் தன்னுடைய பெல்ட்டைக் கழற்றி பலமுறை சுவாதியை அடிக்கின்றார்.

தந்தையின் கோபம் உச்சக் கட்டத்தை அடைந்ததை உணர்ந்த சுவாதி, ஒரே ஓட்டமாக ஓடிப்போய் தன் அறைக்கதவைச் சாத்திக் கொள்கின்றாள்.

வழமையாகக் கடைக்குச் சென்று பொருள்களை வாங்கிக் கொண்டு வீட்டில் நுழைந்த சதீஸூக்குப் பேரதிர்ச்சிக் காத்திருந்தது. இவனைக் கண்டதும் மாத்தியா தன் வாய்க்கு வந்தபடி திட்டித் தீர்த்தார். வேலைக்கார நாயே! நீ உன்னுடைய புத்தியைக் காட்டி விட்டாய், பாவமுனு, கஸ்டமுனு பார்த்தா நீ உன்னுடைய தோட்டத்து புத்தியை காட்டி விட்டாயடா? என பேசிக் கொண்டே சதீஸ்ஸை அடிக்க கையை ஓங்கினார். இதுவரை பொறுமையாக இருந்த சதீஸ் மாத்தியா, நா ஒன்னும் ஒங்க புள்ள சுவாதிக்கு பின்னால சுத்தல.

ஒங்க புள்ளத்தான் என்ன விரும்புவதாகச் சொன்னாள். அந்த புள்ள வாங்கி கொடுத்த பொருள்களையும், தனக்கு எழுதிய லெட்டரையும், இருவரும் எடுத்துக் கொண்ட புகைப்படத்தையும் காட்டினான்.

சதீஸ் விரலில் இருந்த மோதிரத்தைக் கவனித்த மாத்தியா அதில் ளள என எழுதியிருந்தது. இருவரும் நன்றாகப் பழகி இருந்ததை உணர்ந்த மாத்தியா அவமானம் தாங்க முடியாமல் ஒரு நிமிடம் மௌனமாக இருந்தார். அடே நாயே வெளியே போடா! என கத்தி ஏசிவிட்டு அப்படியே சோபாவில் சாய்ந்து கொண்டார்.

சுவரியைத் தேடிய சதீஸ் அவளுடைய ரூம்முக்கு ஓடினான். சதீஸ் ஓடுவதைப் பார்த்துக் கொண்டிருந்த மாத்தியாவுக்கு ஒருபழைய சம்பவம் ஞாபகத்திற்கு வந்தது. தன் மனசாட்சியை உறுத்தியது. ஒரு சில வருடங்களுக்கு முன்னர் தன் வீட்டில் வேலைக்கு வைத்திருந்த அந்தச் சிறுமியைத் தான் துஷ்பிரயோகம் செய்து அந்த பிஞ்சு சிறுமியின் வாழ்க்கையைச் சீரழித்ததிற்குத் தன்னுடைய மகளுக்குக் கிடைத்திருக்கும் தண்டனையும் சரியாக இருப்பது போல உணர்ந்து கொண்டவராய், சிறிது நேரம் ஒருவித மன அழுத்தத்திலும், வாழ்க்கையில் செய்த தவறுக்கு கடவுள் தன்னைத் தண்டித்து விட்டதாகவும் உணர்ந்தார். பக்கத்து அறையில் தன்னுடைய மனைவியின் இருமல் சத்தம் அதிகமாகிக் கொண்டே இருந்தது.

மாத்தியாவின் வீட்டில் ஏதோ அசம்மாவிதம் நடக்கப் போவது போல் ஒரு பிரமைக் காணப்பட்டது. சதீஸ் எவ்வித சலனமுமின்றி சுவாதியை தன்னுடைய வீட்டுக்கு அழைத்துச் செல்ல தயாராக கீழே இறங்கி வந்து கொண்டிருந்தான்.

இனிமேலும் மாத்தியாவுக்கு அவர்களை சேர்த்து வைப்பதை தவிர வேறு வழியில்லை என்பதை உணர்ந்தார்.

(முற்றும்) (யாவும் கற்பனை)



# வெசாக் பக்திப் பாடல் நிகழ்ச்சி

2024 அரச வெசாக் பண்டிகையை முன்னிட்டு, இலங்கை பொலிஸ் பௌத்த மற்றும் மத அலுவல்கள் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட வெசாக் பக்திப் பாடல் நிகழ்ச்சி கொழும்பு-தாமரைத் தடாக அரங்கில் புதன்கிழமை (22) இடம்பெற்றது.




























# தோரணங்கள்...

கொழும்பு மற்றும் அதனை அண்மித்த நகரங்களில் இம்முறை வெசாக் தோரணங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. (படங்கள்: பிரதீப் பத்திரண)

பிரித்தானியா

# பிரித்தானியாவில் ஜூலை 4 பொதுத் தேர்தல்

பிரித்தானியாவை பொறுத்தவரையில் அரசியலமைப்பு ரீதியாக 2025 ஜனவரிக்குள் அங்கு பொதுத் தேர்தலை நடத்த வேண்டும், இது தொடர்பாகப் பிரதமர் சுனக் இது 2024இன் பிற்பகுதியில் நடைபெறும் என்று பலமுறை கூறியிருந்தார்.

இந்நிலையில் பிரித்தானிய வெளியுறவுத்துறை செயலாளர் டேவிட் கேமரூன் அல்பேனியா பயணத்திலிருந்த நிலையில், திடீரென உடனே நாடு திரும்புமாறு அழைக்கப்பட்டார். அப்போதே தேர்தல் குறித்துதான் என்று ஊடகங்களில் செய்திகள் கசிய ஆரம்பித்தது.

இது ஒருபுறம் எனில், பிரித்தானிய பாதுகாப்புத்துறை அமைச்சர் கிராண்ட் ஷாப்ஸ் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் கலந்துகொள்வதற்காகக் கிழக்கு ஐரோப்பாவிற்கான பயணத்தை திடீரென ஒத்திவைத்தார்.

பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் அமைச்சரவைக் கூட்டத்திற்குப் பிறகு பிரித்தானியாவில் ஜூலை 4ஆம் திகதி பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளதாக அதிகாரப்பூர்வமாக அறிவித்தார்.

44 வயதான ரிஷி சுனக், பிரதமராக முதன்முறையாக வாக்காளர்களை எதிர்கொள்ள போகின்ற தேர்தல் இதுவாகும்.

கடந்த ஒக்டோபர் 2022இல் நடந்த வாக்கெடுப்புக்குப் பிறகு அவர் கன்சர்வேடிவ் கட்சியின் தலைவராக நியமிக்கப்பட்டார். அதன்பின்னர் பிரதமரானார்.

எதிர்வரும் ஜூலையில் நடைபெற உள்ள பிரித்தானிய தேர்தல் என்பது 2016ஆம் ஆண்டு பிரெக்சிட் வாக்கெடுப்புக்குப் பின்னர் நடைபெறவுள்ள மூன்றாவது பொதுத் தேர்தலாகும்.

கனடா

# ரஷ்யா மீது மேலும் தடைகளை விதித்த கனடா



ரஷ்யாவின் மீது மேலும் தடைகளை அறிவிப்பதாக கனடிய அரசாங்கம் அறிவித்துள்ளது. வடகொரியாவிடம் ஆயுதங்களை கொள்வனவு செய்தமைக்காக இவ்வாறு புதிய தடைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

உக்ரேன் மீது வடகொரியாவிடமிருந்து கொள்வனவு செய்த ஆயுதங்களை ரஷ்யா பயன்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்த நிலையில், ரஷ்யாவின் இரண்டு நபர்கள் மற்றும் ஆறு நிறுவனங்கள் மீது இவ்வாறு புதிய தடைகளை கனடா அறிவித்துள்ளது.

மேலும், சட்டவிரோதமான முறையில் ஏவுகணைகள் உள்ளிட்ட ஆயுதங்களை போக்குவரத்து செய்தவர்களுக்கு எதிராக தடை விதிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆயுதங்கள் உக்ரேன் மீதான தாக்குதல்களின் போது பயன்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், கனடிய வெளிவிவகார அமைச்சு இந்த தடை குறித்து அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வியட்நாம்

## வியட்நாமின் புதிய ஜனாதிபதியாக

# டோ லாம் தெரிவு



வியட்நாம் ஜனாதிபதியாக இருந்த வோ வான் மீது ஊழல் குற்றச்சாட்டுக்கள் எழுந்தால், அவர் பதவி விலகிய நிலையில், புதிய ஜனாதிபதியாக, அந்நாட்டின் உயர்மட்ட பாதுகாப்பு அதிகாரியான டோ லாம் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவரது நியமனத்தை அந்நாட்டின் தேசிய சபை உறுதி செய்துள்ளது.

இந்நிலையில், வியட்நாமின் ஜனாதிபதி பதவி பெரும்பாலும் சம்பிரதாயமானது. ஆனால், இது நாட்டின் மிக முக்கியமான அரசியல் பதவியான அடுத்த கம்யூனிஸ்ட் கட்சியின் பொது செயலாளராக ஆவதற்கு மிகவும் வலுவானதாக இருக்கும் என்று மூத்த தலைவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

கொல்கத்தா

## இந்தியாவில் மாயமான

# பங்களாதேஷ் எம்.பி. சடலமாக மீட்பு



பங்களாதேஷின் எம்.பியான அன்வருல் அசிம், இந்தியாவில் மாயமானதாக புகார் எழுந்த நிலையில், கடந்த புதன்கிழமை (22), கொல்கத்தா நியூ டவுன் பகுதியில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் குறித்து பொலிஸார் தெரிவிக்கையில், "நாங்கள் பலரை விசாரித்து, விரிவான சி.சி.ரி.வி. காட்சிகளை ஆய்வு செய்துள்ளோம், அதன் மூலம்தான் அவர் கொலை செய்யப்பட்டதை உறுதிப்படுத்த முடிந்தது" என கூறுகின்றனர்.

மேலும், இது தொடர்பாக பங்களாதேஷ் உள்துறை அமைச்சர் அசாதுஸ்மான் கான் கூறுகையில், "இதுவரை, சம்பந்தப்பட்ட கொலையாளிகள் அனைவரும் பங்களாதேஷை சேர்ந்தவர்கள் என்று தெரிய வந்துள்ளது. இது திட்டமிட்ட கொலை. இதுதொடர்பில், பங்களாதேஷில் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேசமயம், இந்த சம்பவத்தில் இந்தியர் எவருக்கும் தொடர்பு இல்லாததால், இந்தியாவுடனான உறவில் மோசமடையும் வகையில் எதுவும் இங்கு நடக்கவில்லை" என்றார்.

இந்த கொலை சம்பவம் தொடர்பாக பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்னறர்.

மகாராஷ்டிரா

## சிறுவனுக்கு எதிராக

# வெகுண்டெழுந்த மக்கள்



மகாராஷ்டிரா மாநிலம், புனேவில் உள்ள கல்யாணி நகர் பகுதியைச் சேர்ந்தவர் தொழிலதிபரான விஷால் அகர்வால் என்பவருக்கு 17 வயது மகன் உள்ளார். இவர் கடந்த 19ஆம் திகதி அதிகாலை தனது நண்பர்களுடன் தனது தந்தையின் சொகுசு வாகனத்தில் அதிவேகமாக சென்றுள்ளார்.

அப்போது மோட்டார் சைக்கிளில் மீது மோதி விபத்துக்குள்ளானது. இந்தக் கோர விபத்தில், ஐ.டி. ஊழியர்கள் இருவர் சம்பவ இடத்திலேயே க உயிரிழந்தனர்.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட சிறுவனை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து சென்று பீட்சா, பிரியாணி வழங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இது தொடர்பான புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வெளியாகி பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இதனையடுத்து, சிறுவர் தொடர்பான குற்றங்களை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்தில் சிறுவன் ஆஜர்படுத்தப்பட்டார்.

அங்கு அவரை விசாரித்த நீதிமன்றம், அவருக்கு உடனடியாக பிணை வழங்கியது. இது பொதுமக்கள் மத்தியில் கடும் விமர்சனத்துக்குள்ளானது.

இதனைத் தொடர்ந்து, தலைமறைவாக இருந்த சிறுவனின் தந்தையான விஷால் அகர்வாலை கடந்த 21ஆம் திகதி பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தனர். அப்போது அங்கிருந்த பொதுமக்கள், விஷால் அகர்வாலுக்கு எதிராக கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டதால் நீதிமன்றத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.




# ஐ.பி.எல்: வெளியேற்றப்பட்ட பெங்களூரு

இந்தியன் பிறீமியர் லீக்கிலிருந்து (ஐ.பி.எல்.) றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு வெளியேறியுள்ளது.

அஹமதாபாத்தில் புதன்கிழமை (22) நடைபெற்ற ராஜஸ்தான் றோயல்ஸுடனான வெளியேற்றப் போட்டியில் தோல்வியடைந்தமையைத் தொடர்ந்தே இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறுவதற்கான தகுதிகாண் போட்டிக்குத் தகுதி பெறாமல் தொடரிலிருந்து வெளியேறியது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற ராஜஸ்தானின் அணித்தலைவர் சஞ்சு சாம்ஸன் தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூரு, குறிப்பிட்ட இடைவெளிகளில் ட்ரெண்ட் போல்ட், யுஸ்வேந்திர சஹால், இரவிச்சந்திரன் அஷ்வின் (2), ஆவேஷ் கான் (3), சந்தீப் ஷர்மாவிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 172 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், ரஜாட் பட்டிடார் 34 (22), விராட் கோலி 33 (24), மஹிபால் லொம்ரோர் 32 (17), கமரன் கிறீன் 27 (21) ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு 173 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான், லொக்கி பெர்கியூசன், கமரன் கிறீன், கரண் ஷர்மா, ரண் அவுட், மொஹமட் சிராஜ்ஜிடம் (2) குறிப்பிட்ட இடைவெளிகளில் விக்கெட்டுகளை இழந்தபோதும் யஷஸ்வி ஜைஸ்வாலின் 45 (30), ரியான் பராக்கின் 36 (26), ஷிம்ரோன் ஹெட்மயரின் 26 (14) ஓட்டங்களோடு 19 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து வெற்றியிலக்கையடைந்து இரண்டாவது தகுதிகாண் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இப்போட்டியின் நாயகனாக அஷ்வின் தெரிவானார்.

இந்நிலையில், சென்னையில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள இரண்டாவது தகுதிகாண் போட்டியில் சண்றைசர்ஸ் ஹைதரபாத்தை ராஜஸ்தான் எதிர்கொள்ளவுள்ளது.




# யூரோப்பா லீக்: சம்பியனான அத்லாண்டா

## முடிவுக்கு வந்த லெவர்குசனின் தோல்வியுறாப் பயணம்

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் யூரோப்பா லீக் தொடரில் இத்தாலிய சீரி ஏ கழகமான அத்லாண்டா சம்பியனானது.

அயர்லாந்தில் வியாழக்கிழமை (23) நடைபெற்ற ஜேர்மனிய புண்டெஸ்லிகா கழகமான பயெர் லெவர்குசனுடனான இறுதிப் போட்டியில் 3-0 என்ற கோல் கணக்கில் வென்றே அத்லாண்டா சம்பியனானது.

அத்லாண்டா சார்பாகப் பெறப்பட்ட மூன்று கோல்களையும் அடெமோலா லுக்மன் பெற்றிருந்தார்.

இப்போட்டியில் தோற்றதன் மூலம் அதிக போட்டிகளில் தொடர்ந்து தோல்வியைச் சந்திக்காத கழகம் என்ற லெவர்குசனின் 51 போட்டிகள் சாதனை முடிவுக்கு வந்தது.





# வெற்றிக்கிண்ண அறிமுகம்

ஏ.எல்.எம்.ஷினாஸ்

மருதமுனை பிரீமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப்போட்டிக்கான சம்பியன் வெற்றிக்கிண்ண அறிமுக நிகழ்வு மருதமுனையில் புதன்கிழமை (22) மாலை நடைபெற்றது.

எம்.பி.எல். நிறைவேற்று குழு தவிசாளர் முஸம்மில் நுஸைர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆபிதா ஹேன்லூம் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் எம்.என்.இஸட். றூமி பிரதம அதிதியாக கலந்து கொண்டு சம்பியன் வெற்றிக் கிண்ணத்தை எம்.பி.எல். நிறைவேற்று குழு தவிசாளரிடம் கையளித்தார்.

இந்த நிகழ்வில் சாம்பியன் வெற்றி கிண்ணத்துடன் சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ளும் அணிகளின் தலைவர்கள் கைகோர்த்துக் கொண்டதுடன் பிரீமியர் லீக் நிறைவேற்று பணிப்பாளர் சபை உறுப்பினர் ஏ.எல்.எம்.ஷினாஸ், றாஸிக் நபாயில் உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.



## மைலோ கிண்ணத் தொடரில்

# மூன்றாமிடம் பெற்ற வட்டக்கண்டல் பாடசாலை மாணவர் கௌரவிப்பு

எஸ்.ஆர்.லெம்பேட்தே

சிய ரீதியில் இடம்பெற்ற மைலோ கிண்ண கால்பந்தாட்டத் தொடரில், 12 வயதுகுட்பட்ட பெண்கள் பிரிவில் மூன்றாமிடத்தைப் பெற்றுக் கொண்ட மன்னார் வட்டக்கண்டல் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை (21) நடைபெற்றது.



## இந்தியத் தலைமைப் பயிற்றுவிப்பாளர் பதவியிலிருந்து

# விலகியிருக்கும் பொன்டிங்

இந்திய ஆண்கள் கிரிக்கெட் அணியின் அடுத்த தலைமைப் பயிற்றுவிப்பாளராக பொறுப்பேற்பதற்கு அணுகப்பட்டதை வெளிப்படுத்தியுள்ள அவுஸ்திரேலியாவின் முன்னாள் அணித்தலைவரான ரிக்கி பொன்டிங், தற்போதைய நிலையில் தனது வாழ்க்கை முறையில் இது பொருந்திப் போகவில்லை எனக் கூறியுள்ளார்.

பொன்டிங்குடன் இந்தியாவின் தலைமைப் பயிற்றுவிப்பாளர் பதவிக்கு அவுஸ்திரேலியாவின் முன்னாள் வீரர் ஜஸ்டின் லாங்கர், நியூசிலாந்தின் முன்னாள் அணித்தலைவர் ஸ்டீபன் பிளேமிங், இந்தியாவின் முன்னாள் வீரர் கௌதம் கம்பீர் ஆகியோரது பெயர்களும் அடிபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 24 மே 2024, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.